429

வள்ளுவர் 8

தமிழ் வாசகம்



429
5 - AUG 1957
MADRAS
600
T3
031(8)
N57
146196.

நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

வள்ளுவர் தமிழ் வாசகம்

ஏழாம் வகுப்பு

ஆசிரியர்கள் :

வித்துவான் எஸ். நாகராசன், M. A., B. T.,
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மேரி பெண்டிர் போதனு முறை
உயர்நிலைப் பள்ளி, சேலம்.

புலவர் நா. சுந்தரராசனுர்,
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளி,
கோவை.

சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

பதிப்புரிமை] 1957 [விலை நயா பைசா 87
(அணு 14)

முதற் பதிப்பு 1956
திருத்திய பதிப்பு 1957

T3
03|(8)
N57

Approved by the Madras Text Book Committee
for class use vide Fort St. George Gazettee
Supplement to Part I-B dated 29th May 1957 page 2.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008.
146196

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ், சென்னை-1.

முன்னுரை

"வள்ளுவர் தமிழ் வாசகம்" என்னும் பெயர் கொண்ட இப்பாட நூல் வரிசை, அரசியலாரின் பாட வியலுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது. மாணவருலகம் மகிழ்ந்து போற்றும் வண்ணம் ஓவியங்களும் பாடங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. கலைச்செல்வம் கவினுற விளங்கும் இந்நூல் வரிசை, பல்லாண்டு மாணவர்க்குக் கற்பித்து வந்த பயிற்சியால் உருவானது. மாணவரது பொது அறிவை வளர்த்தற்கு இன்றியமையாததாய் இருப்பது உரைநடை. இந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே வரையப்பட்டுள்ள இத்தொடர் நூல்களில் பாட வியலுக்கேற்பப் பலவகைப் பாடங்கள், பாடக் கேள்விகள், பயிற்சிகள், அரும்பதங்கள் ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களது சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் தன்மை வாய்ந்தன.

செய்யுள் கலை நலம் அமைந்தது; மாணவரது கருத்தை ஈர்ப்பது; இயற்கை எழிலைத் தெரிவித்து இன்பம் பயப்பது. கவியின் கருத்தை யறிந்து, கவி நலம் காணக் கற்பிக்கப்படுமாயின், அது கல்லா மக்களின் உள்ளத்தையும் கவினுறப் பிணிக்கும். இக்கருத்தை மேற்கொண்டே கற்பிக்கத் தக்க செய்யுள்கள் பாடங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்திற்கும் இறுதியில் விதி வருமுறையில் இலக்கணப் பாடங்கள், அதற்குப் பின் பயிற்சிகள் ஆகியன தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களும் கல்வித் துறையினரும் இந்நூல் வரிசையை மாணவர்க்குப் பயன்படச் செய்து எம்மை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கொள்கின்றனம்.

ஈரோடு
15—10—'56

ஆசிரியர்கள்

தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது.

யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது.

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு,

வெற்றி, வெற்றி, வெற்றி.

பொருளடக்கம்

எண்		பக்கம்
	உரைநடைப் பகுதி	
1.	புலவரைப் போற்றிய புரவலர்கள் ...	1
2.	தமிழ்ப் புரவலர் ஈகை	10
3.	காவலனைத் திருத்திய பாவலர் ...	12
4.	சட்ட சபைகள் ...	18
5.	உழவுத் தொழில் ...	25
6.	குந்தியும் கன்னனும் ...	34
7.	நீராவி கண்ட வரலாறு	45
8.	சுகிர்லாபம்	51
9.	குற்றாலம் ...	57
10.	நாடகக் கலை ...	64
11.	இயேசுநாதர் அறிவுரை ...	70
12.	காளமேகப் புலவர் ...	76
	செய்யுட் பகுதி	
1.	கடவுள் வாழ்த்து ...	83
2.	இயற்கை ...	87
3.	அறவுரை ...	89
4.	காதை ...	103
5.	பல்சுவை ...	112

1. புலவரைப் போற்றிய புரவலர்கள்

வடக்கில் வேங்கடம், தெற்கில் குமரி ஆகிய இவ்வெல்லைகட்கு உட்பட்டது தமிழகம். தமிழகத்தில் வாழ்ந்தோர் யாவரும் இனிமை மிகுந்த தமிழ் மொழியையே பேசிவந்தனர். தமிழ் மொழி மிகவும் தொன்மையானது. சங்க காலத்தில் புலவர்கள் பலர் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தனர். அவர்களால் நம் செந்தமிழ் சிறந்து விளங்கியது.

அந்நாளில் தமிழ் நாட்டின் பெரும் பரப்பை முடியுடை மூவேந்தர் மட்டுமின்றிச் சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர். அவர்கள் யாவரும் செந்தமிழ் நூல்களின் இன்பத்தைச் செவ்வையாகச் சுவைத்தவர்கள். அவர்கள் தங்கள் அவையில் அறிவு புகட்டும் ஆற்றல் பெற்ற புலவர்கள் பலரை ஆதரித்து நல்வாழ்வு பெற்று வாழ்ந்தனர். புலவர் பெருமக்களும் ஏற்றபோது அவர்களுக்கு அறிவுரை கூறி, அழியா இலக்கியங்களை இயற்றித் தமிழ் நாட்டிற்குத் தொண்டு புரிந்தனர்.

பாண்டிய நாட்டில் இப்பொழுது பிரான்மலை என வழங்கப்பெறும் மலை, சங்க காலத்தில் பறம்பு மலை என்னும் பெயர் பெற்றிருந்தது. அம்மலையைச் சூழ்ந்த நாடு பறம்பு நாடு என்று வழங்கியது. அது நீர்வளம் நிலவளம் மிக்க நாடு. அந்நாட்டை ஆண்டு வந்த மன்னன் பாரி ஆவான். அவனை வேள் பாரி என்றும் வழங்குவர். அவன் கடையெழு

வள்ளல்களில் ஒருவன். அவன் செந்தமிழ்ப் புலவர் களைத் தன் அவைக்களத்தே கொண்டு நல்லாட்சி நடத்தி வந்தான்.

பாரியின் அவைக்களப் புலவரில் சிறந்தவர் கபிலர். கபிலர் தம்மையொத்த பிற புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர். அவரைத் தன் அமைச்சர்களுள் ஒருவராகக் கொண்டான் பாரி. கபிலர் பாரியின் அமைச்சராகவும் அவன் மக்க ளுக்கு ஆசிரியராகவும் இருந்து வந்தார். இதனால், பாரியும் கபிலரும் சிறந்த நண்பர்களாயினர்.

பாரிவள்ளல் சிறந்த கொடையாளி. ஈவதில் வேற்றுமை காணா இயல்பினன். தன் நாட்டு வளம் காணத் தேரேறிச் சென்ற பாரி ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். அது கொழுகொம்பின்றித் தவிப்பதைக் கண்டு தன் தேரையே அதற்குக் கொம்பாக விடுத்துத் தன் வழியே நடந்து சென்றான்.

பாரி மன்னனது புகழைக் கேட்டனர் முடியுடை மூவேந்தர்; பொறாமை கொண்டனர். அவர்கள் மூவரும் படையெடுத்து வந்து பாரியை எதிர்த்தனர். போர் நெடுநாட்கள் நடந்தது. பாரியை வெல்ல அவர்களால் இயலவில்லை. அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்து அவனைக் கொன்றனர். அமைச்சரும் அவைக்களப் புலவரும் ஆகிய கபிலர் பாரியின் சாவைக் கேட்டுப் பதறினர்; உடனே இறப்பதற்கும் துணிந்தார். ஆயினும் அவர் தமக்கு மற்றொரு கடமை இருப்பதை மறந்தாரில்லை. பாரியின் மகளிர் இருவரையும் தம்முடன் அழைத்துச்

சென்றார்; அவர்களுக்கு ஆவன செய்து தம் கடமையை முடித்தார்; நண்பனைக் காணத் தீ நடுவில் குதித்து உயிர் நீத்தார்.

கபிலர் தம்மைப் புரந்த புரவலனுக்குத் தம் கடமையைக் குறைவறச் செய்தார் என்றே கூற வேண்டும். இங்ஙனம் நன்றியறிவு பெற்ற நாவலரை நண்பராகப் பெற்ற பாரியின் திறம் வியத்தற்குரியதேயாகும்.

புலவர்களைப் போற்றிய புரவலர்களுள் சிறந்த மற்றொருவன் குமணன் ஆவான். குமணன் கொங்கு நாட்டிலுள்ள முதிரமலைப் பகுதியை ஆண்டவன். இது இப்பொழுது குதிரைமலை என்று வழங்கப்படுகின்றது; கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டைக்கு அருகே உள்ளது. குமணன் தன்னை நாடி வந்த புலவர்களுக்கு வேண்டியவற்றை வேண்டிய வண்ணம் விருப்போடு கொடுத்து மகிழ்ந்தான்.

குமணன் பெருந்தலைச் சாத்தனார், பெருஞ் சித்திரனார் என்னும் புலவர்களை ஆதரித்தவன். அவன் ஒரு சமயம் அவனது இளவல் இளங்குமணனால் நாடு கடத்தப்பட்டிருந்தான். அதனையறியாத பெருந்தலைச் சாத்தனார் தம் வறுமையை எடுத்துக் கூறிப் பொருள் பெற அவனிடம் சென்றார்; நாட்டில் நடந்ததை அறிந்தார்; காட்டிற்குக் கடுகிச் சென்று குமணனைக் கண்டு தம் வறுமையை ஓர் அழகிய செய்யுளில் அமைத்துக் கூறினார். குமணன் செய்வதறியாது சிறிதுபொழுது திகைத்தான். தன் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பெரும்பொருள்

தருவதாகத் தன் தம்பி பறை சாற்றியது நினைவிற்கு வந்தது; உடனே தன் வாளை உருவிப் புலவரிடம் ஈந்தான்; "என் தலையை வெட்டி எடுத்துச் சென்று தம்பி கை கொடுத்துப் பெரும் பொருள் பெறுக" என்றான்.

சாத்தனார்க்குக் குமணன் வாள் அளித்தல்

சாத்தனார் நிலையை உணர்ந்தார்; வாளைக் கையில் ஏந்தி இளங்குமணனிடம் சென்றார்; அவனுக்குப் பல அறவுரைகளைக் கூறி அறிவு புகட்டினார். இளங்குமணன் அறிவு பெற்றான்; தமையனை மீண்டும் அரசுகட்டில் ஏற்றினான். இருவரும் ஒன்றுபட்டனர். புலவரும் பெரும் பொருள் பெற்று ஏகினார்.

குமணனால் போற்றப்பட்ட மற்றொரு புலவர் பெருஞ்சித்திரனார். அவர் தலைசிறந்த புலவர்; பெருமிதம் மிக்கவர்; இன்முகத்துடன் அளிக்கும்

பொருளையே ஏற்பார்; பொருள் ஒன்றனையே பெரிதெனக் கருதார். அவர் ஒருகால் இளவெளிமான் என்பானிடம் சென்றார். அவன் பெருஞ்சித்திரனாரது தகுதியை அறிந்திலன்; சிறிது பொருள் தந்தான். அவர் அதனைப் பெறாது விரைந்து குமணனிடம் சென்றார்; அவனிடம் தம் வறுமை நிலையை உள்ளது உள்ளவாறு விளக்கிக் கூறினார். குமணன் புலவரது தகுதியை நன்கு அறிந்தவன். எனவே, அவன் புலவருக்குப் பல்வகைச் செல்வங்களையும் நல்கினான். அவற்றுடன் அவர் ஏறிச் செல்ல, ஆண் யானை ஒன்றையும் அளித்தான். பெருஞ்சித்திரனார் அவற்றைப் பெற்றுக் கொண்டார்; புலவரது நிலையறியாத இளவெளிமானுடைய நாட்டு வழியே சென்றார்; அங்குத் தாம் ஏறி வந்த பகட்டினை அவனது காவல் மரத்தில் கட்டினார்; "இது யான் உனக்குத் தந்த பரிசில்" என்று இளவெளிமானை நோக்கிக் கூறிப் பெருமிதத்தோடு அவ்விடம் விட்டகன்றார். இளவெளிமான் வெட்கித் தலை குனிந்தான்.

சங்க காலத்திற்குப் பின்னும் நம் நாட்டில் புரவலர்கள் பலர் இருந்து வந்துள்ளனர். அத்தகையோரில் ஒருவர் கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் ஆவர்.

சடையப்ப வள்ளல் திருவெண்ணெய் நல்லூர் என்னும் ஊரில் பிறந்தவர். வேளாளர் இனம் இவரால் புகழ்பெற்றது. இவர் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்னாத இதயம் பெற்றவர். தம்மை இரந்து பொருள் பெற்றுச் சென்ற இரவலர்

பிறரிடம் சென்று இரக்காத வண்ணம் பெருஞ்செல்வம் நல்கும் தன்மையர். இவர் அக்காலத்துத் தமிழ் நாட்டை ஆண்டு வந்த மூவேந்தர்களாலும் ஒருங்கு மதிக்கப் பெற்ற பெருமையை உடையவர்; தமிழ்ப் புலவரிடத்து மிக்க அன்பு பூண்டு அவர்களை ஆதரித்தவர். இவரது பேரருளாலேயே இராமாயண காவியம் செந்தமிழில் சிறந்து விளங்குகிறது.

தமிழில் இராமாயணத்தை இயற்றியவர் பைந்தமிழ்க் கவி கம்பராவார். அவர் இளமையில் பெற்றோரை இழந்தார். அவரைத் திருவழுந்தூரில் வாழ்ந்து வந்த, காளி கோவில் பூசை செய்யும் உவச்ச மரபினன் ஒருவன் வளர்த்து வந்தான்.

அவனும் இறந்துபடவே கம்பர் திருவெண்ணெய் நல்லூர் சென்று சடையப்ப வள்ளலிடம் அடைக்கல மடைந்தார். அவரது வீட்டில் கம்பர் சிற்றேவல் செய்து வரலாயினர். அவரது மக்களுடன்வழித்துணைக்கெனப் பள்ளி செல்வதும் கம்பர் வேலை. கம்பர் கிடைத்த அவ்வமயத்தைப் பயன் படுத்திக் கொண்டார்; யாவரும் வியக்கும் வண்ணம் கல்வியில் முன்னேறலானர். வள்ளல் கம்பரது ஆற்றலைக் கண்டு அவரையும் பள்ளிக்கனுப்பினர். கலைமகள் அருளால் கம்பர் இலக்கண இலக்கியங்களில் சிறந்த அறிவைப் பெற்று மாபெரும் புலவராக மிளிரலானர்.

அக்காலத்துச் சோழநாட்டை ஆண்டு வந்த அநபாயன் என்னும் மன்னன் அவரது செந்தமிழ்ப் புலமையைக் கேட்டறிந்து அவரைத் தன் அவைக்களப் புலவராக்கினன். சோழமன்னன் அநபாய

னும் சடையப்ப வள்ளலும் கம்பரை வடமொழியி லுள்ள இராம காதையைத் தமிழில் இயற்றவேண்டி னர். கம்பரும் அதற்கிசைந்து தமிழில் இராமா யணத்தைப் பாடினர். கம்பர் செய்ந்நன்றி மறவாத வர். ஆகையால், அவர் தாம் இயற்றிய இராமா யணத்துள் பலவிடங்களில் தம்மை ஆதரித்த புரவலராகிய சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாராட்டி யுள்ளார்.

இத்தகு வரலாறுகள் நம் பைந்தமிழ்க் கடலில் பரந்து காணப்படுகின்றன. அவற்றை அறிந்து போற்றுதல் நம் கடமையாகும்.

அருஞ்சொற்கள்

புரவலர்	நல்லாட்சி	மாவட்டம்	பகடு
தொன்மை	நடாத்தி	இளவல்	அடைக்கலம்
குறுநிலம்	நீத்தார்	கடுகி	மிளிர
பரப்பு	புரந்த	அரசுகட்டில்	பரந்து
தொண்டு	சூழ்ச்சி	பெருமிதம்	சிற்றேவல்

வினாக்கள்

1. தமிழகத்தின் எல்லைகள் யாவை ?

2. தமிழ் எப்படிச் சிறந்து விளங்கியது ?

3. தமிழ் மன்னர்களும் புலவர்களும் எங்ஙனம் வாழ்ந் தனர் ?

4. பாரி மன்னனது நாடு யாது? அவன் ஆட்சி எத்த கையது ?

5. பாரியின் அவைக்களப் புலவரில் சிறந்தவர் யார் ? அவரைப்பற்றிக் கூறுக.

6. பாரி கொடையாளி என்பதை எப்படி அறியலாகும் ?

7. பாரியுடன் போர் தொடுத்தவர் எவர் ? ஏன் ?

8. கபிலரது கடமை என்ன ? அதை நிறைவேற்றியது எப்படி ?

9. குமணன் ஆண்ட நாடு யாது ?

10. பெருந்தலைச் சாத்தனார் யார் ? குமணன் ஏன் அவருக்கு வாளீந்தான் ?

11. குமணன் போற்றிய மற்றொரு புலவர் யார்? அவர் இளவெளிமானை வெட்கப்படச் செய்தது எங்ஙனம் ?

12. கம்பரது வரலாற்றைக் கூறுக.

13. சடையப்ப வள்ளலைப் பற்றி நீவிர் அறிந்ததைக் கூறுக.

14. கம்பர் செய்ந்நன்றி மறவாதவர் என்பது எப்படித் தெரிகிறது ?

பயிற்சி

1. இப்பாடத்தில் கூறப்படாத ஒரு சில சங்ககாலப் புலவர்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்க.

2. இப்பாடத்தில் காணும் புலவர்களது பாடல்களை ஆசிரியரைக் கேட்டுப் படிக்கவும்.

3. முடியுடை மூவேந்தர்கள் எவர் ?

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—நல்வாழ்வு, வியத்தற்குரியது, தகுதி, பைந்தமிழ்.

5. இரக்காத-இறக்காத — வேறுபாடு தெரிந்து கொள்க.

இலக்கணம்

சொல் :

எழுத்துக்கள் தனித்தோ அல்லது சேர்ந்தோ பொருள் தந்தால் அது சொல் எனப்படும். அவை நான்கு:—

1. பெயர்ச்சொல், 2. வினைச்சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல்.

பெயர்ச்சொல்:—புத்தகம், நாற்காலி, மாறன்.

வினைச்சொல்:-படித்தான், அமர்ந்தான், சென்றான்.

இடைச்சொல்:—வேற்றுமை உருபுகள், வினைச்சொற்களின் விகுதிகள், இடைநிலைகள் முதலியன. இவை பெயர் வினைகளை அடுத்து வரும். (போல, ஐ, ஆன்)—சிங்கத்தைப் **போல** இருந்தான். அவனை-(ஐ)க் கண்டேன். அவன் வந்தான்—(ஆன்.)

உரிச்சொல்:-செய்யுளில் வருவது. பெயர் வினைகளின் குணத்தை உணர்த்துவது. (சால, உறு, தவ, நனி) சாலப் பேசினான், **நனி** தின்றான்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் நான்குவகைச் சொற்களையும் தனியே எடுத்தெழுதுக :—

1. காலைப் படிப்புச் சால நன்று.
2. பால் போல இனிமையான சொல்.
3. சங்கப் புலவர்கள் தமிழை வளர்த்தனர்.
4. தன்னைப்போல் பிறரையும் நினை.
5. தேனைப் போன்றது செந்தமிழ்.

2. தமிழ்ப் புரவலர் ஈகை

வீரமுர சணையுறங்கு மோசிகீரன்
விழிக்கும்வரை வெண்கவரி வீசி நின்ருன்
சேரலிரும் பொறையரிசிற் கிழார்வாய் வந்த
செழுந்தமிழுக் கரியணையைப் பரிசி லீந்தான்
பாரியொரு முல்லைக்குத் தேரை யீந்தான்
பரிசிலீந் திளந்திரையன் பாடல் பெற்ருன்
கோரி வந்த புலவனுக்குத் தலைகொடுக்கக்
குறித்தகும ணன்கொடையின் கொற்ற
மென்னே.

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

குறிப்புரை:—

இன்று நம்மிடையே வாழும் புலவர் மணிகளுள் ஒருவர் சுத்தானந்த பாரதியார். இவரது ஊர் சிவகங்கை. இவர் தந்தையார் பெயர் சடாதரர். தாயின் பெயர் காமாட்சி அம்மையார். பிறப்பு 11—5—1896. இவர் இளமைமுதல் துறவியாக வாழ்பவர்; தொடக்கத்தில் ஆசிரியராக இருந்தார்; பின் அரசியலில் ஈடுபட்டிருந்தார். இவர் பல நூல்களையும் கவிதைகளையும் இயற்றியுள்ளார்; இன்னும் கவிதைத் தொண்டு செய்து வருகிருர். இங்குள்ள பாடல் இவரது 'தமிழ்க்கனல்' என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

அருஞ்சொற்பொருள்

முரசணை—முரசு + அணை = முரசுக்கட்டில். அரியணை—சிங்காசனம். கொற்றம் = ஆட்சி, சிறப்பு.

வினாக்கள்

1. இப்பாடலில் கூறப்பட்டுள்ள புலவர்கள் எவரெவர்?

2. அவர்களை ஆதரித்த மன்னர்கள் எவரெவர்?

3. அவர்கள் புலவர்களை ஆதரித்தது எங்ஙனம்?

4. அஃறிணைப் பொருளிடத்தும் கருணை காட்டிய வள்ளல் யார்?—எங்ஙனம் காட்டினர்?

பயிற்சி

1. இப்பாடலை மனப்பாடமாக்கிக் கொள்க.

2. இப்பாடலில் கூறப்பட்டுள்ள வரலாறுகளை அறிந்து கொள்க ; சுருக்கமாக எழுதி வைத்துக்கொள்க.

3. இங்குக் கூறப்பட்டவை போன்றுள்ள புரவலர் ஈகையினை அறிக. இதுபோன்ற பாடலை எழுத முயற்சி செய்க.

3. காவலனைத் திருத்திய பாவலர்

பண்டு தொட்டு நம் தமிழகத்தை முடிமன்னர் மூவரும் குறுநிலமன்னர் பலருமாக ஆண்டு வந்த னர். சில காலங்களில் அவர்களுக்கிடையில் போர் நிகழ்வதுமுண்டு. அத்தகைய போர்களுட் சிலவற் றைப் புலவர்கள் தோன்றி நிறுத்தி, அமைதியை நிலை நாட்டியுள்ளனர். அவர்களுள் சிறப்பாக விளங் கியவர் கோவூர்கிழார் என்ற செந்தமிழ்ப் புலவராவர்.

கோவூர் என்ற ஊரில் பிறந்தமையால் இவருக் குக் கோவூர்கிழார் என்னும் பெயர் வந்தது என்பர். இவர் கசடறக் கற்று, கற்றதன்படி நடக்கும் நல் லொழுக்கம் பெற்றவர்; இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபற ஓதி உணர்ந்தவர்; ஒப்புயர்வற்ற அருந் தமிழ்ப் புலவரென அனைவராலும் பாராட்டப் பெற்ற வர். முடியுடை மன்னவர் மூவரும் இவரது நட்பை வேண்டிப் பெற்று மகிழ்ந்தனர். அதனால் இவருக்கு மணிமுடி மன்னரிடத்தும் அளவிலாச் செல்வாக்கு இருந்து வந்தது.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு கிள்ளி வளவன் என்னும் சோழன் இப்புலவர் காலத்தில் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் குளமுற்றம் என் னும் ஊரில் இறந்தான். அதனால் அவனைக் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று பிற்காலத் தவர் கூறி வந்தனர்.

அவன் காலத்தில் மலையமான் திருமுடிக்காரி எனும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் கடை யெழு வள்ளல்களில் ஒருவன். அவன் பாவலரைப்

பாராட்டிப் பரிசில் ஈவதைப் பெருவிருப்பாகக் கொண்டவன். அவன் வண்மையிற் சிறந்திருந் தது போல வன்மையிலும் சிறந்து விளங்கினன். அவனது துணைகொண்டு அமர்புரிவோர் வெற்றி யடைவது திண்ணம்.

கிள்ளிவளவன் தான் நடத்திய போர்கள் சில வற்றில் தோல்வியுற்றான். இதற்குக் காரணம் காரியே என்று கிள்ளிவளவன் கருதினன். இத னல் அவனுக்கும் காரிக்கும் தீராப்பகை உண்டா யிற்று. கிள்ளிவளவன் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளுதற்கு முன்னர்க் காரி இறந்தான். ஆயி னும் கிள்ளியின் பகை மாறவில்லை.

காரிக்கு மக்கள் இருவர் இருந்தனர். அவர்கள் பால் மணம் மாருப்பிள்ளைகள். காரியின் வீரம் அம் மக்களிடத்தும் தோன்றித் தன்னை வருத்துமோ என்று அவன் அஞ்சினன்; 'முளையிலேயே முட் புதரைக் கிள்ளி எறிதல் வேண்டும்' என்ற எண்ணம் கொண்டான்; காரியின் இளமக்களைச் சிறைப் பிடித்துக் கொணர்ந்தான். அவர்களைக் கண்டதும் அவன் உளம் நடுங்கியது; உடனே அவர்களை ஒழிக்கத் திட்டமிட்டான்.

கிள்ளிவளவன் காரியின் மக்களைக் குறித்த ஒரு நாளில் கொலைக் களத்தில் நிறுத்தினன். இளமக்களா தலின் புதிய சூழ்நிலையைக் கண்டு அவ்விருவரும் அழலாயினர். அப்பொழுது அவர்களுக்கு முன்னே மலைபோன்ற யானை ஒன்று ஆடி அசைந்து வந்தது. அதனைக் கண்ட சிறுவர்கள் அழுகையை நிறுத்தி வியப்புடன் அதனை நோக்கியபடியே நின்றிருந்தனர்.

அக்காட்சியை அருகிருந்து கண்ட நகரமாந்தர் அனைவரும் கிள்ளிவளவனது கடுஞ்செயலை வெறுத்த வண்ணம் வாளாவிருந்தனர்.

'காரியின் மக்களை யானையின் காலால் இடறச் செய்கிறான் கிள்ளி' என்ற செய்தியைக் கோவூர் கிழார் கேட்டறிந்தார். அவர் உள்ளம் கொதித்தது. கிள்ளிவளவனிடம் விரைந்து சென்றார். பகைமை

புலவர் கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறல்

யால் பண்பாட்டை மறந்த மன்னன் புலவரின் பதற்றத்தைக் கண்டான். புலவர் பெருமான் அவனை நோக்கி, "அரசே! உன்னால் கொல்லப்பட இருக்கும் இவர்கள் கொடை வள்ளலான காரியின் மக்கள். காரி புலவர்கட்கு வாரி வழங்குவதில் வல்லவனென்பது உனக்குத் தெரியாததன்று. மேலும், இச்சிறுவர்கள் எதனையும் உணரவியலாத் தன்மையர். தம்மைக் கொல்ல வரும் யானையைக்

கண்டு வியந்து நிற்பதைப் பார்; இவர்களைக் கொல்லுதல் நின் பெருமைக் கேற்றதன்று; நான் கூறுவனவற்றை எண்ணிப்பார். அதன் பின்னும் நீ இப்பச் சிளங்குழவிகளைக் கொல்ல விரும்புவாயாயின் உன் விருப்பத்தின்படி செய்க" என்று அவன் உளம் உருக எடுத்துக் கூறினர்.

அருள் உள்ளம் படைத்த கோவூர் கிழாரின் அறிவுரை அரசனது கொடுமையை மாய்த்தது. அம் மக்கள் மேல் அன்பு பூண்டு அவர்களை விடுவிக்க ஆணையிட்டான்; காரியினிடம் கொண்ட பகைக்கு அவனுடைய குழவிகளைக் கொல்ல நினைத்தது தவறென்று உணர்ந்தான்; தன் செயலுக்கு நாணமுற்றான். அரசன் முடிவை அறிந்த குடி மக்கள் அனைவரும் அவனைப் பாராட்டினர்.

அரசன் சீற்றமுற்ற காலத்தும் அஞ்சாது அறத்தை எடுத்துரைத்தார் கோவூர் கிழார். தந் நலம் பேணாது பிறர்நலம் பேணுதல் ஒன்றையே கொள்கையாகப் பெற்றவர்கள் நம் செந்தமிழ்ப் புலவர்கள். அவர்தம் அரும் பெரும் பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவது நம் கடனாகும்.

அருஞ்சொற்கள்

காவலன்	கசடற	செல்வாக்கு	சூழ்நிலை
தமிழகம்	இலக்கியம்	துஞ்சிய	வியப்பு
பாவலன்	ஐயம்	அமர்	கடுஞ்செயல்
அமைதி	திரிபு	திண்ணம்	வாளா
நிலைநாட்டு	மணிமுடி	மாறு	இடற

வினுக்கள்

1. கோவூர் கிழாரைப் பற்றி நீ அறிந்தவற்றை வரைக.

2. கிள்ளிவளவனைப் பிற்காலத்தவர் எங்ஙனம் கூறி வந்தனர்? ஏன்?

3. கிள்ளிவளவனுக்கு யாருடன் ஏன் பகைமை உண்டாயிற்று?

4. கிள்ளிவளவன் காரியின் மைந்தரைக் கொல்ல எண்ணியது ஏன்?

5. கோவூர் கிழார் கிள்ளிக்குக் கூறிய அறிவுரையைக் கூறுக.

6. இவ்வரலாற்ருல் நாம் அறிவது யாது?

பயிற்சி

1. இது புறநானூறு என்னும் சங்க கால நூலில் உள்ள வரலாறு. இதுபோன்ற வரலாற்றுக் கதைகள் சங்க நூல்களில் பல உண்டு. அவற்றுள் மூன்று கதைகளைக் கேட்டு அறிந்துகொள்க.

2. இவ்வரலாற்றைக் கூறும் பாடலைப் படிக்கக் கற்றுக் கொள்க.

3. வாக்கியங்களில் வைத்து எழுதுக:-

கசடற, ஐயந்திரிபற, பால் மணம் மாரு.

இலக்கணம்

அறுவகைப் பெயர்கள் :

பொருட் பெயர்-முருகன், மாடு, கோழி, புலவர்.

இடப் பெயர்-கொலைக்களம், ஊர், நாடு, மலை.

காலப் பெயர்-காலை, மாலை, மாதம், ஆண்டு.

சினைப் பெயர்-கை, கால், வேர், கிளை.

குணப் பெயர்-வெண்மை, காரம், உருண்டை, தன்மை.

தொழிற் பெயர்-வருதல், ஆடல், கற்றல், அறிதல்.

பயிற்சி

I. இப்பாடத்திலிருந்து அறுவகைப் பெயர்களுக்கும் மும்மூன்று உதாரணங்கள் தருக:-

II. அறுவகைப் பெயர்களையும் எடுத்து எழுதுக:-

1. காலையில் படித்தல் நல்லது.
2. விளையாடல் கை கால்களுக்கு உரம் தரும்.
3. கடவுளைத் தொழுதல் கல்வியின் பயன்.
4. இனிமைத் தமிழை யாவரும் கற்றல் வேண்டும்.
5. மரக்கிளைகள் பழங்களைப் பெற்று இருக்கின்றன.
6. அந்த ஊர் மக்கள் மிக நல்லவர்கள்.
7. மலைகளும் ஆறுகளும் நாட்டிற்கு அழகு ஊட்டுபவை.
8. ஈரோடு வாணிகத்தில் சிறந்த ஊர்.

4. சட்டசபைகள்

நம் பாரதநாடு பழம்பெரு நாடு; பழங்கால முதலே நாகரிகம் பெற்றநாடு; கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய நாடு; சிறப்புடைய மன்னவர் பலர் செங்கோல் செலுத்திய நாடு. பழங்காலத் தில் நம் நாட்டை முடிமன்னரே ஆண்டு வந்த னர். அவர்கள் தம் விருப்பம் போல் ஆளாமல் மக்கள் விருப்பம் அறிந்து ஆண்டுவந்தனர்.

இடைக்காலத்தில் இந்தியா சிறிதுகாலம் வெளி நாட்டவரால் ஆளப்பட்டு வந்தது. நம் பண்டைய ஆட்சிமுறை மாறிற்று. ஆட்சியாளர் தந்நலம் கருதி மக்கள் நலத்தை மறந்தனர். அவ்வாட்சியை நீக்கக் காந்தியடிகள் தோற்றுவித்த அமைதியான போராட்டம் நமக்கு வெற்றியை அளித்தது. நாம் உரிமையைப் பெற்றோம்; நம் நாடு குடியரசு நாடாகி யது. மக்கள் மக்களுக்காக அரசாட்சி செய்வதே குடி யாட்சி எனப்படும். அவ்வாட்சி எங்ஙனம் நடை பெறுகிறதென்பதை நீங்கள் அறியவேண்டும்.

இன்று இந்தியா பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் இராச்சியம் என்று வழங்கப்படுகிறது. ஒவ்வோர் இராச்சியமும் ஒரு தலைவரின் கீழ் அமைந்துள்ளது. அத்தலைவர் கவர் னர் எனப்படுவார். நம் சென்னை இராச்சியத்தில் கவர்னருக்கு ஆட்சி பற்றிய ஆலோசனைகளைக்கூற மேல்சபை, கீழ்ச்சபை என இரு சட்டசபைகள் இருக்கின்றன.

கீழ்ச்சபை உறுப்பினர்கள் மக்களால் தேர்ந் தெடுக்கப் படுவார்கள். இராச்சியத்தின் மக்கள்

தொகைக்குத் தக்கபடி கீழ்ச்சபையில் அறுப திற்குக் குறையாமலும் ஐந்நூற்றுக்கு மேற்படா மலும் உறுப்பினர்கள் இருப்பார்கள். இந்தக் கீழ்ச் சபையின் உறுப்பினராலும், வாணிகக் கழகங்களா லும், கவர்னராலும் தெரிந்தெடுக்கப் படுபவர்களே மேல்சபையினர் ஆவர். மேல் சபை குறைந்தது நாற்பது உறுப்பினரையாவது பெற்றிருக்கும்.



சென்னைச் சட்டசபை

கவர்னர் தம் ஆட்சியை நடத்திச் செல்ல அமைச்சர் அவை ஒன்றை அமைப்பார். இந்த அமைச்சர் அவை, கீழ்ச்சபையில் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்ததாக இருக்கும். ஒரு முதலமைச் சரின் கீழ்த் தேவையான எண்ணிக்கையுள்ள அமைச்சர்களிருப்பர். அமைச்சர்கள் நிர்வாக இலாக் காக்களைப் பிரித்துக்கொண்டு நாட்டை ஆண்டு வருவர். மேல்சபையானது கீழ்ச்சபை செய்வன வற்றை யெல்லாம் ஆய்ந்து அங்கீகரிக்கும்.

இனி இந்தியா முழுமையும் எங்ஙனம் ஆளப் படுகின்றது என்பதைப் பார்ப்போம். நம் இராச்சியத்திற்குத் தனித் தனியே இரு சட்டசபைகள் இருப்பதைப்போல இந்தியா முழுமைக்கும் உள்ள ஆட்சிக்கும் இரு சபைகள் உண்டு. ஒன்று மக்கள் சபை. இது 'லோக் சபை' எனக் கூறப்படுகிறது. மற்ருென்று இராச்சிய சபை. இது 'கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ்' என ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. மக்கள் சபையில் ஐந்நூற்றுக்கு மேற்படாத உறுப்பி



இந்தியப் பாராளுமன்றம்

னர் இருப்பர். இவர்கள் யாவரும் வாக்காளரால் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள். இராச்சிய சபையில் 250 உறுப்பினர்கள் இருப்பர். இவர்களுள் ஒரு சிலரை நாட்டுத்தலைவர் (ஜனாதிபதி) நியமனம் செய்வார். ஏனையோரை மக்கள் சபை தேர்ந்தெடுக்கும். இவ்விரு சபைகளும் பாராளுமன்றத்தின் உறுப்புக் களாகும்.

இந்தியக் குடியரசின் துணைத்தலைவரே (உப ஜனாதிபதி) இராச்சிய சபையின் தலைவர் ஆவர்.

இவரைப் பாராளுமன்றம் (மக்கள் சபையும் இராச்சிய சபையும்) ஜனாதிபதியைக் கலந்தாலோசித்துத் தேர்ந்தெடுக்கும். மக்கள் சபைக்குத் தலைவர் ஒருவரும், துணைத்தலைவர் ஒருவரும் இருப்பர்.

மக்கள் சபை, இராச்சிய சபை ஆகிய இரண்டும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் நாட்டுத் தலைவர் (ஜனாதிபதி) தேர்ந்தெடுக்கப்படுவார். இவரே நம் இந்தியாவின் சட்டபூர்வமான அரசியல் தலைவர். எனினும், நாட்டு ஆட்சி பிரதம அமைச்சராலும் ஏனைய அமைச்சர்களாலுமே நடைபெற்று வருகிறது.

மக்கள் சபையின் பெரும்பான்மைக் கட்சியினர் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பர். ஜனாதிபதியின் அங்கீகாரத்தின்மீது அவரே நாட்டின் முதல் அமைச்சராவர். அவர் தம் விருப்பப்படி அமைச்சர்களை நியமித்துக் கொண்டு ஆட்சிபுரிவார். இவர்கள் யாவரும் மக்கள் சபைக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள்.

இராச்சியங்களின் தலைவர்களாக நியமிக்கப் பெறும் கவர்னர்களைப் பாராளுமன்றத்தின் இணக்கத்தின்மீது நாட்டுத் தலைவரே நியமிப்பார். கவர்னர் இந்திய அர்சாங்கத்தின் பிரதிநிதியாக இருந்து இராச்சிய ஆட்சி நடைபெற உதவிபுரிவார்.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெறும். இதில் பொதுமக்களாகிய வாக்காளர் பாராளு மன்றத்தின் மக்கள் சபை உறுப்பினர்களையும் இராச்சியங்களின் கீழ்ச்சபை

உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர் ஐந்தாண்டுக் காலம் வரை உறுப்பினர் பதவிவகித்து நாட்டிற்கான நன்மைகளைப் புரிவர். பதவிக் காலம் முடிந்த பின்னரும் இவர்கள் தேர்தலில் போட்டியிட்டு நாட்டினை ஆள நாடலாம்.

பாராளுமன்றத்தின் இராச்சிய சபை உறுப்பினரைப் பாராளுமன்ற மக்கள் சபையினர் தேர்ந்தெடுப்பர். இராச்சியங்களின் மேல் சபை உறுப்பினரை இராச்சியங்களின் கீழ்ச்சபையினர் தேர்ந்தெடுப்பர்.

இப்போது நம் நாட்டுத் தலைவராக இருப்பவர் ஸ்ரீ பாபு இராஜேந்திரப் பிரசாத்; துணைத் தலைவர் ஸ்ரீ இராதாகிருட்டிணன்; பிரதம அமைச்சர் ஸ்ரீ ஜவாஹர்லால் நெஹ்ரு. நம் இராச்சிய ஆட்சியில் முதல் அமைச்சராக இருப்பவர் ஸ்ரீ காமராஜ். இவர்கள் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக இரவும் பகலும் ஓயாது உழைத்து வருகின்றனர்.

அருஞ்சொற்கள்

நாகரிகம்	போராட்டம்	இயற்றும்	பாராளுமன்றம்
கேள்வி	உரிமை	தேர்ந்தெடு	அமைச்சர்
செங்கோல்	குடியரசு	பெரும்பான்மை	நாடலாம்
தந்நலம்	கவர்னர்	தேர்தல்	பொறுப்பு

வினாக்கள்

1. பழங்காலத்தில் நம் நாட்டை ஆண்டவர்கள் எவர்? அவர்கள் எப்படி ஆண்டனர்?

2. இடைக்காலத்தில் இந்தியா எப்படி ஆளப்பட்டது?

3. இக்கால ஆட்சியின் பெயர் யாது? முற்காலத்து ஆட்சியின் பெயர் யாது?

4. இராச்சிய ஆட்சியில் உள்ள இரு சபைகளின் பெயர்கள் யாவை? தலைவரின் பெயர் யாது?

5. இராச்சிய ஆட்சியிலுள்ள இரு சபைகள் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படும்?

6. இராச்சிய ஆட்சி நடைபெறுவது எப்படி?

7. இந்தியா ஆட்சிக்கான இரு சபைகள் யாவை?

8. அவற்றுள் அங்கம் வகிப்போர் எவரெவர்?

9. நாட்டுத் தலைவர் என்பவர் யார்? அவரை யார் எப்படித் தேர்ந்தெடுப்பர்?

10. மக்கள் சபை எப்படி ஆட்சி புரிந்து வருகிறது?

11. பாராளு மன்றம் என்பது யாது?

12. இராச்சிய ஆட்சிக்கும் இந்திய ஆட்சிக்கும் உள்ள தொடர்பு யாது?

பயிற்சி

1. நம் நாட்டைப் போன்ற மற்ெருரு குடியரசு நாட்டைக் கேட்டு அறிக.

2. ஒரு தேர்தல் நடக்குமிடத்தைப் போய்ப் பார்க்கவும். அது நடைபெறுவது எப்படி என்று தெரிந்துகொள்க.

3. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:—நாகரிகம், அமைதியான, நடைபெற்று.

4. எதிர்ப்பதம் எழுதுக:-செங்கோல், மேற்படாத, போட்டியிட்டு.

இலக்கணம்

அளவைப் பெயர் :

அளவுகளைக் குறிப்பது அளவைப் பெயர் எனப்படும்.

1. எண்ணல் அளவைப் பெயர்கள்—கால், ஒன்று, இரண்டு.

2. எடுத்தல் அளவைப் பெயர்கள்—பலம், வீசை, தூக்கு.

3. முகத்தல் அளவைப் பெயர்கள்—படி, உழக்கு, கலம்.

4, நீட்டல் அளவைப் பெயர்கள்— அடி, முழம், சாண்.

முறைப் பெயர் :

அண்ணன், அம்மா, மகன், மாமா என்பன போன்றவை முறைப் பெயர்கள் எனப்படும்.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   1. உன்னுடைய———கைகளையும் தூக்கு.

   2. அவர் ஒரு ரூபாய்க்கு ஒரு————அரிசி வாங்கினார்.

   3. நான்கு————வெல்லம் கொடு.

   4. சொக்காய் தைப்பதற்கு எனக்கு எத்தனை——— துணி வேண்டும்.

2. உனக்குத் தெரிந்த முறைப் பெயர்களை வரிசைப்படுத்தி எழுதுக.

5. உழவுத் தொழில்

600 008

'தொழுதூண் சுவையில் உழுதூண் இனிது' என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்' என்றும், 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை' என்றும் உழவுத் தொழிலைப் பற்றி ஆன்றோர் புகழ்ந்துரைத்தனர். ஏனெனில், பெறு தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர் யாவரும் உயிர் வாழ்ந்து இன்புற்று இருக்க உதவுவது உழவுத் தொழிலேயாகும்.

ஏர் உழுதல்

உழவு என்பதற்கு வருந்தி முயலுதல் என்பது பொருள். ஏர்உழுதல், பரம்படித்தல், நிலந்திருத்தல், புழுதியாக்கல், சேடை செய்தல், விதை விதைத் தல், நாற்று நடுதல், நீர் பாய்ச்சுதல், களைகட்டல், ஓம்புதல், விளைவறுத்தல், போர் வேய்தல், பிணை

யடித்தல், சேர்த்தல், பார்த்தல் என்னும் பலவகைத் தொழில்கள் உழவுத் தொழிலுக்கு உறுப்பாக அமைந்திருக்கின்றன. இத்தொழில்கள் யாவும் வருந்தி முயலுவோர்க்கே பயன்படும். எனவே, இவற்றை உள்ளடக்கிய தொழிலே உழவுத் தொழில் என்றனர்.

இவ்வுலகில் மக்கள் பல தொழில்களை மேற் கொண்டிருக்கின்றனர். இவை யாவும் பசி தீர உண்பதற்கே யன்றி வேறில்லை. ஒருவனுடைய பசிப்பிணியைத் தீர்க்க வல்லது உணவேயன்றிப் பெருஞ் செல்வமன்று. பசி என்னும் நோயை நேராய் நீக்கத் தக்கது உழவுத் தொழில் ஒன்றேயாகும். உழவுத் தொழிலை இகழ்ந்து ஒதுக்கி விட்டுப் பிற தொழில்களில் ஒருவன் மெய் வருந்தி உழைத்தல் தகாது. அப்படிச் செய்தல் கறவைப்பசு இருக்க மலட்டுப்பசுவைக் கறந்து ஏக்க முறுவதை ஒக்கும்.

மனிதன் ஆதியில் இயற்கையாக விளைந்த காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் புசித்து வாழ்க் கையை நடத்தி வந்தான். அவை தன்னுடைய பசியைத் தீர்க்கப் போதாமையை அவன் கண் டான். உண்ணக் கூடியவைகளை வேண்டிய அளவு உண்டாக்க எண்ணி அவன் நிலத்தைப் பண்படுத் தத் தொடங்கினான். இவ்வாறு உழவுத் தொழிலில் சென்றவன், நாளடைவில் தனக்கு உதவியாகக் கலப்பையைக் கைக் கொண்டான்; கலப்பை செய் வதற்குரிய மரத்தை வெட்டக் கோடரியைக் கண்டு பிடித்தான். இங்ஙனமே கொழு, சால், ஏற்றம்

முதலிய உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத் துணைக் கருவிகள் யாவும் கண்டு பிடிக்கப்பட்டன. இதனால் இத்தொழிலே, பிற தொழில்கள் தோன்றக் காரணமாயிருந்தது என்று கூறலாகும்.

ஒருவன் நிலத்தைப் பண்படுத்திப் பயனை அடைய வேண்டுமாயின் அவன் ஒரு சில கலைகளில் ஓரளவு தேர்ச்சி பெற்றவனாகியிருத்தல் வேண்டும். நிலநூல், வானநூல், இயற்கைநூல், விஞ்ஞான நூல் ஆகியவற்றை உழவன் அறிய வேண்டும்; அறிந்திருந்தால்தான் காலமறிந்து, இடமறிந்து, நிலத்தின் தன்மையறிந்து உழுவான்; உணவுப் பொருளைச் சேர்த்து உலகுக்கு அளித்துத் தானும் உண்டு உயர்ந்தோனாய் வாழ்வான். மேற்கண்ட நூல்களில் வல்ல உழவர்கள் இருக்கும் நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்பட வழியில்லை.

நம் நாட்டு உழவர்கள் பெரும்பாலும் கல்வி கேள்வி யற்றவர்களாக இருக்கிறார்கள். கற்றறிந்த பலர் உழவுத்தொழில் இழிதொழில் என்று நினைக்கின்றனர். அவர்கள் பிற அலுவலகங்களை அடைந்து வேலை செய்கின்றனர்; வயிறார உண்ண இயலாது வருந்துகின்றனர். எனவே நாம் நம் முன்னோர் உழவைக் குறித்துக் கூறிய உரைகளை அறிந்து உழவுத் தொழிலை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் நம் நாடு பண்டைக் காலத்துப் பெருமையை அடைய இயலும். வயிறார உண்டு பெரும் பசியையும் போக்கலாம்; பிறருக்கும் கொடுக்கலாம்.

நம் நாட்டில் இருப்பன பெரும்பாலும் சிற்றூர்களே. சிற்றூர்களில் இருக்கும் மக்களில் பெரும்பா

லோர் உழவுத் தொழிலைச் செய்பவர். ஆயினும், நாம் உணவுப் பஞ்சத்தால் வருந்துகின்றோம். இதற்குக் காரணம் என்ன? இதனை ஆராய்தல் வேண்டும். நம் நாட்டு உழவர்கள் தங்கள் முன்னோர் சென்ற முறையிலிருந்து ஒரு சிறிதும் பிறழ விரும்பாதவர்கள். இக்காலப் புதிய சாதனங்களைக் கையாண்டு உழவுத் தொழிலை நடத்த அவர்கள் விரும்புவதில்லை. அப்படி ஒரு சிலர் விரும்பினாலும் அச்சாதனங்களைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. அரைவயிற்றுக்கஞ்சி பருகி, அரைக்குப் போதிய ஆடையின்றி அலையும் உழவன் இக்கால உழவுக் கருவிகளையும் எருவையும் எங்ஙனம் பெற இயலும்? அன்றியும் நம் நாட்டு உழவனிடம் உள்ள உழவு மாடுகள் உரம் பெற்றனவாக இருப்பதில்லை. அவற்றை அவன் அடிக்கடி மாற்ற வேண்டி இருக்கிறது. அதனால் அவன் குடித்தனம் அடிக்கடி துன்பமடைகிறது. இந்நிலை மாற வேண்டும்.

நம் நாடு இப்போது உரிமை பெற்ற நாடு. இனி வெளி நாட்டாரை நாம் குறைகூற வியலாது. எனவே, நம் நாட்டு உழவர்களுக்கு வேண்டியவை எவை என்பதை அறியும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. முதன் முதலாக நம் நாட்டுக் குடியானவர்கள் கல்வியறிவைப் பெற வேண்டும். கையெழுத்திடத் தெரிந்தால் போதும் என்ற எண்ணம் மாற வேண்டும். உழவுத்தொழிலைப் பற்றிய புதிய முறைகளை அறியவேண்டும். அவற்றை மேற் கொண்டு உழவுத் தொழிலை நடத்த வேண்டும்.

நம் நாட்டு உழவர்கள் கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்தி அதில் சேரவேண்டும். சிறுசிறு நிலப் பகுதிகள் ஒன்று சேரின் பெரிய நிலப்பகுதி அமை கின்றது. இதனால் உழவர்கள் ஆண்டு முழுமையும் பயிர்த் தொழிலைக் காலத்திற் கேற்றவாறு செய்ய லாம். புதிய சாதனங்களில் இயந்திரக் கலப்பை (டிராக்டர்) முக்கியமானது. 'அகல உழுவதிலும் ஆழ உழு' என்பதற்கு அதுவே சிறந்த சாதனம். இயந்திரக் கலப்பையைக் கொண்டு குறுகிய காலத் தில் பெருமளவு நிலத்தைப் பண்படுத்தலாம். நம்



இயந்திரக் கலப்பை

ஏர்களினால் உழுவதைக் காட்டிலும் இயந்திரக் கலப்பையால் ஆழமாக உழலாகும். காலமும் வீணாகாது; மாடுகளின் உழைப்பையும் குறைக்க லாகும். கூட்டுறவுப் பண்ணை முறையால் உரம், தழை, நல்ல விதை முதலியவை குறைந்த விலைக் குக் கிடைக்கும்; கடனாகவும் பெற்றுத் தவணை களில் செலுத்தலாம்.

குடியானவர்களுக்கு இருக்க இடம் வேண்டும். சுகாதாரமில்லாக் குடிசைகளில் தங்கி அவர்கள் அடிக்கடி நோய்களுக்குப் பலியாகின்றனர். குடியானவர்களுக்கு வேண்டிய உதவிகளை இந்நாட்டில் உள்ள பெரிய நிலச்சுவான்தாரர்களும் அரசாங்கமும் உடனடியாகச் செய்ய வேண்டும்.

தனக்கே தங்குமிடமின்றித் தவிக்கும் குடியானவன் தன் ஆடு மாடுகள் தங்குவதற்குரிய இடத்தை எங்ஙனம் அமைப்பான்? ஆடுமாடுகளைச் சரியாகக் காப்பாற்ருத காரணத்தாலேயே அவை நோய்களுக்குப் பலியாகின்றன. எனவே, புதிய கால் நடைகளுக்காகக் கடன் வாங்கி, கடனுக்குரிய வட்டித் தொகையை அவன் ஆண்டு தோறும் கொடுக்க வேண்டி யுள்ளது. இதனல் உழவன் துன்பம் அடைந்து தன் தொழிலைச் செய்யமாட்டாது தவிக்கிருன். இதற்கேற்ற உதவிகளையும் அவன் அடைதல் வேண்டும்.

குடியானவன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு கைத்தொழில் கற்றிருத்தல் வேண்டும். நம் நாட்டில் உழவர்கள் ஒரு சில மாதங்களே உழைக்கின்றனர். மற்றைய மாதங்களில் அவர்கள் உழைப்பதற்குப் போதுமான வசதிகள் நம் நாட்டில் இல்லை. அதனல் அவர்கள் வீண் பொழுது போக்குகின்றனர். அத்தகையவர்களுக்கு ஏதேனும் ஒரு கைத்தொழிலில் பழக்கமிருப்பின் உழவுத் தொழிலுக்குரிய காலம் போக, எஞ்சிய மாதங்களில் அவர்கள் ஏதேனும் தொழில் செய்து அதிகப்படி வருவாயை அடைவர். இதனல் அவர்கள் சோம்பலும் நீங்கும்; நல் வாழ்வும் வாழ்வர்

நம் சென்னை அரசாங்கம் வயலில் உழும் உழவர்களுக்கு வேண்டிய ஆதரவு காட்டிச் சட்டம் செய்திருக்கிறது. உழவின் பெரும்பயனை நிலத்திற்கு உரியவன் இனி எடுத்துச் செல்ல முடியாது. உழவர்கள் நல்வாழ்வு பெற்று வாழப் பல செயல்கள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, வருங்காலத்தில் நம் நாட்டுப் பயிர்த் தொழில் நன்கு செழிக்கும் என்பது திண்ணம். நிலம் என்னும் நல்லாள் நகாதவாறு நாம் யாவரும் உழவை மேற்கொள்ளுவோமாக.

அருஞ்சொற்கள்

தொழுது	பரம்பு	ஓம்புதல்	புழுதி
ஓரளவு	பொறுப்பு	ஊண்	அகல
வேய்தல்	ஏக்கம்	ஆராய்தல்	பண்
பிறழ	சேடை	பிணை	சால்
பார்த்தல்	உரம்	உழந்தும்	தவணை
முயலுதல்	கொழு	மலடு	கட்டல்

வினாக்கள்

1. உழவுத் தொழிலைப்பற்றி ஆன்றோர் கூறியவற்றைக் கூறுக.

2. உழவுத் தொழிலின் உறுப்புகள் யாவை?

3. உழவுத்தொழில் பிற தொழில்களைவிட மேலானது என்பது எப்படிப் பொருந்தும் ?

4. பிற தொழிலுக்குச் சமமாகக் கூறப்பட்டவை யாவை?

5. உழவுத் தொழில் எப்படித் தோன்றி இருக்கக் கூடும்?

6. பிற கைத் தொழில்களுக்குக் காரணம் உழவே என்பது எப்படிப் பொருந்தும் ?

7. உழவனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய கலைகள் யாவை? ஏன்?

8. கற்றவர்கள் உழவுத் தொழிலை எப்படி எண்ணுகின்றனர்? அதன் பயன் யாது?

9. நம் நாட்டு உழவுத் தொழில் இக்காலத்தில் எப்படி நடைபெறுகின்றது?

10. கூட்டுறவுப் பண்ணையால் உண்டாகும் பயன் யாது?

11. உழவனுக்குச் செய்ய வேண்டிய உதவிகள் யாவை?

12. கைத்தொழில் உழவனுக்குத் தேவையா? ஏன்?

13. படித்தவர்கள் உழவுத் தொழிலுக்கு எங்ஙனம் உதவலாகும்?

14. இக்காலம் நம் அரசாங்கம் உழவர்களுக்குச் செய்துள்ளது யாது?

பயிற்சி

1. இரு பொருள் தருக:-களை, கட்டல், பண், அரை, உரம்.

2. இயந்திரக் கலப்பை வேலை செய்வதை நேரில் சென்று பார்க்கவும்.

3. வயலிற்குச் சென்று பரம்படித்தல், களைகட்டல், போரடித்தல் ஆகியவற்றைக் கவனிக்கவும்.

4. உழவைப்பற்றி 20 வரிகளில் உன் வகுப்புக் கையெழுத்துப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை வரைக.

இலக்கணம்

இடுகுறி, காரணப் பெயர்கள்:

இன்ன காரணம்பற்றி இடப்பட்ட பெயர்கள் என்று கூற முடியாதவை இடுகுறிப் பெயர்கள்.

(உ-ம்) மண், கல், நாய், மரம்.

காரணம் பற்றி இடப்பெற்ற பெயர்கள் காரணப் பெயர்கள்.

(உ-ம்) நாற்காலி, காற்ருடி, பறவை.

பயிற்சி

1. உங்கள் பாடத்தில் வந்துள்ள இடுகுறி, காரணப் பெயர்களைக் கண்டறிக.

2. பின்னுள்ளவற்றுள் ஒவ்வொன்றும் இன்ன பெயர் என்று கூறுக:—

முள்ளி, முக்காலி, வயல், தலையணை, மரங்கொத்தி, வளையல், பரம்பு, வேம்பு.

---

6. குந்தியும் கன்னனும்

இடம் :—அத்தினபுரம், கன்னன் வீடு.

காலம் :—காலை

உறுப்பினர் :—கன்னன், குந்தி.

[குந்தி கன்னன் வீடு தேடி வருகிருள். தொலைவில் வரும்போதே கன்னன் அவளைக் காண்கிருன்; தன் வீட்டிற்குத் தான் அவள் வருகிருள் என்பதை ஐயமற அறிகிருன்; தனக்குள் பேசிக்கொள்கிருன்.]

கன்னன் :—(தனக்குள்) அது யார்? குந்தி தேவியல்லவா? பாண்டவர் ஐவரின் தாய் அல்லவா அவள்! அவள் என்னைத் தேடி வருவானேன்? நல்லது இருக்கட்டும். வந்த பின் தானே தெரிகிறது.

(குந்தி வீட்டில் நுழைகிருள்) அம்மையே! வாருங்கள் வாருங்கள்! (வணங்குகிருன்) தங்கள் வரவு நல்வரவாகுக. நீங்கள் என் வீடு நோக்கிவந்தது என் அருந்தவப் பயனே. அமருங்கள். தாங்கள் வந்த காரியம் என்னவோ?

குந்தி :—கன்ன, நான் உன் தாய். நானே உன்னைப் பெற்றெடுத்தவள். ஆயினும், உன்னை வளர்க்கும் பேறு பெருத பாவி. இதனை உன்னிடம் அறிவிக்கவே வந்தேன்.

கன்னன்:—அம்மையீர், இதென்ன வியப்பான செய்தி? தாங்களா என் தாய்? அங்ஙனமாயின் தாங்கள் என்னை வளர்க்காமைக்குக் காரணம் என்னவோ ?

குந்தி:—கன்ன, கேள் கூறுகிறேன். நான் கன்னியா யிருந்த காலம் அது. துர்வாசர் என்ற தவ முனிக்குப்பணிவிடை புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் என்னிடம் அன்புகொண்டு ஒரு மந்திரம் கற்பித்தார். சிறுமியான யான் அதனை உச்சரித்தேன். அவ்வளவுதான்; சூரிய தேவன் என் முன் தோன்றி உன்னை அளித் தான். ஊரார் என்ன சொல்வரோ என்றஞ்சி உன்னை ஒரு பெட்டகத்தில் வைத்து ஆற்றில் விட்டு விட்டேன்; நீ தான் அக்குழந்தை யென் பதை இப்போதுதான் அறிந்தேன்.

கன்னன்:—தாயே, நீர் சொல்வது உண்மையாயிருக்க லாம். ஆனல், நான் அதை நம்பமுடியாது. என்னைத் தங்கள் மகன் என்று சொல்லிக் கொண்டு இங்கு வந்தவர்களுக்குக் கணக் கில்லை. தாயென்று வந்த பேய் போன்றவர்கள் கொடுத்த தொல்லை நீங்கவேயில்லை.

குந்தி:—கன்ன, உண்மையை உள்ளவாறு உரைத் துள்ளேன். பொய்கூறிப் பெறத்தக்கது என்ன இருக்கிறது!

கன்னன்:—(தனக்குள்) இவள் தான் என் தாயாரானல் போர் நடக்கவிருக்கும் இக்காலம் வரை ஏன் காத்திருந்தாள்? ஆம்! இது கண்ணனது வஞ்சனையாகத்தான் இருக்கவேண்டும். (வெளிப்படை) அன்னையே, என் உண்மைத் தாயை அறியத் தேவர்கள் எனக்கோர் ஆடை யை அளித்துள்ளனர். தாயல்லார் தாயென வந்தபோது அணிந்துகொள்ளுமாறு அதனை

அவர்களிடம் அளித்தேன். ஆடையை அணிந்ததுதான் கண்டேன். ஒவ்வொருவரும் எரிந்து சாம்பலானதை அறிந்தேன். எனவே அதைத் தாங்கள்.........

குந்தி:—என்னருமை மகனே, கன்ஞ, அடாது செய்பவர் படாதுபடுவர். இதில் ஐயமில்லை. எங்கே அந்த ஆடையை இங்குக் கொண்டு வா. நீயே என் உண்மையை ஒரு நொடியில் அறியக் காட்டுகிறேன்.

கன்னன்:—(புடைவையுடன் வந்து) அன்னையே, இதுதான் அவ்வாடை. "உன் தாயல்லாத பிறர் இதனை அணிவராயின் அவர்கள் அழிவர்" என்று தேவர்கள் கூறி இதனைக் கொடுத்தனர்.

குந்தி:—ஐயோ! கன்ஞ, நான் உன் தாய் என்பதை மெய்ப்பிக்க வேண்டிய நிலை நேர்ந்ததே! இருக்கட்டும்; அதை என்னிடம் கொடு.

[ஆடையை வாங்கி விரித்து உதறி உடலின் மேற்பட அதனைப் போர்த்திக்கொண்டு இருந்தாள்.]

கன்னன்:—(அவள் அழிவிலாதிருந்ததைக் கண்டு) தாயே, என்னே என் ஊழ்வினை! உமது அன்புடைக் கரங்களால் ஆதரித்தணைக்கும் பேறு நான் பெறவில்லையே! நீரே என்னை ஈன்ற தாய். உம்மைச் சோதித்த என்னை மன்னிப்பீரா! (முழந்தாளிட்டு வணங்கினன்.)

குந்தி :—(கன்னனைக் கட்டியணைத்து உச்சி மோந்து பெருமூச்சு விட்டு) உன்னை அன்றே பரிந்து வளர்த்து எடுக்கப் பாக்கியம்செய்யவில்லை. இப்பொழுதுதான் என்ன! பெற்றவள் நானிருக்கிறேன். இனியேனும் உன்னுடன் இருந்து உற்றதைச் செய்ய விரும்புகிறேன். என்னுடன் வந்து விடு. நாம் பாண்டவரிடம் செல்வோம்.

கன்னன் தாயாகிய குந்தியை வணங்கல்

கன்னன்:—தாயே, அது தகுமா? அங்ஙனம் செய்தால் உலகம் என்ன சொல்லும்? என் தம்பியராகிய பாண்டவர்தாம் என்ன நினைப்பார்கள்? முடியாது; அப்படிச் செய்தல் தகாது.

குந்தி:—குழந்தாய், கன்னா, யான் சொல்வதைக்கேள். நீ உன் இளையவரைப்பற்றி ஒன்றும் அறியாய். உன்னை அவர்கள் அறிய வேண்டியதுதான் தாமதம். உன் அடி வருடி உன் ஏவலைக் கேட்

கத் துடித்து நிற்பர்; அன்புடன் வணங்கி உனக்கு அரசாட்சியை அளித்து முடி சூட்டு வர்; பிற அரசர்கள் யாவரும் உன் அரண்மனை வாயிலில் வணங்கக் காத்து நிற்பர். உன் ஆண்மை, செல்வம் ஆகியன ஓங்கும். குருகுல மன்னர்களுக்குள் தலை சிறந்தவனாவாய். உடனே என்னோடு புறப்படு.

கன்னன்:—அம்மா, நீர் என்னைப் பெற்ற காலத்தில் கைவிட்டு விட்டீர். பழிக்கு அஞ்சியே ஆற்றில் விட்டு விட்டதாகக் கொள்வோம். அன்று முதல் இன்று வரை என் நண்பன் துரியோதனன் என்னை ஆருயிர் நண்பனாய்க் கருதி வருகிறான்; என்னை அங்க தேசத்து மன்னனாக்கினான்; இன்னானென்று அறியாத என்னுடன் இருந்து உண்கிறான்; தன் உறவினர்களும் என்னை வணங்குமாறு பெருமையை எனக்கு அளித்துள்ளான். அவனை விட்டு நான் இப்போது வரலாகுமா?

குந்தி:—மகனே, இவை யாவும் உன் வீரத்தைக் கண்டு செய்தவை. உன்னைக் கொண்டு வெற்றி பெறவே துரியோதனன் இப்பெருமைகளை உனக்கு அளித்துள்ளான். நீ இவற்றை நம்பாதே. இவை கானல் நீர்.

கன்னன்:—தாயே, அப்படிச் சொல்லாதீர். துரியோதனன் என்னிடம் மிகவும் நம்பிக்கை வைத்துள்ளான். ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நானும் அவன் மனைவி பானுமதியும் அந்தப்புரத்தில் சூதாடிக் கொண்டிருந்

தோம். அப்போது துரியோதனன் வருவதைக் கண்டாள் பானுமதி. அவள் எழுந்து செல்ல முயன்ருள். ஆட்டத்தின் நடுவில் எழுந்து செல்லக்கூடாதென அவள் மடியைப் பிடித்து நான் இழுத்தேன். அவளது மேகலே அறுந்து மணிகள் சிதறின. அப்போது அங்கு வந்த துரியோதனனைக் கண்டு நான் அஞ்சி ஒன்றும் பேசாதிருந்தேன். துரியோதனன் என்னைப் பார்த்து இம்மணிகளை ஒன்று சேர்க்கவா அல்லது கோத்துக் கொடுக்கவா என்று கேட்டானே யன்றி, வேறு விதமாக என்னை எண்ணவில்லை. அப்படிப்பட்ட நண்பனுக்கு இச்சமயத்தில் உதவுவதுதான் எனது கடமை. மேலும் அதுவே அறமும் ஆகும்.

குந்தி:—என் கண்ணே கன்ன! தாய் சொல்லுக்கு மிஞ்சிய மந்திரம் இல்லை என்பதை நீ அறிய வில்லையா? தாயாகிய எனக்கு நீ செய்யவேண் டிய கடமை ஒன்றுமில்லையா?

கன்னன்:—தாயே, பலவற்றைப் பேசுவதால் பயன் ஒன்றும் இல்லை. போரோ தொடங்கப் போகின் றது. நீர் ஏதோ என்னிடம் கேட்கவே இச்சம யத்தில் வந்திருக்கிறீர் அல்லவா?

குந்தி:—கன்ன, 'பெற்றமனம் பித்து; பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழி என் வரையில் சரியாகி விட்டது. நின் சொல் என் உள்ளத்தைச் சுடு கின்றது. நான் என்ன செய்வேன் (விம்மி விம்மி அழுகிருள்.)

கன்னன்:–தாயே, மன்னித்து விடுங்கள். (அவளது கண்களில் வழியும் நீரைத் துடைத்து) நம் செயலால் ஆவது ஒன்றுமில்லை. நான் உம்முடன் வரமுடியாமைக்கு வருந்தவேண்டாம். நான் என்னிடம் வருகின்றவர்கள் விரும்பியவற்றை ஈந்து வருகிறேன். உங்களுக்கு ஏதேனும் வேண்டுமா? வேண்டின் கேளுங்கள் தாயே, விருப்புடன் கொடுத்து மகிழ்வேன்.

குந்தி:—என் அருமந்த மைந்தா, எனக்கு இரு வரங்கள் வேண்டும். தவருமல் கொடுப்பாயா?

கன்னன்:—அம்மையே, கேட்போர் யாவருக்கும் இல்லை என்னுமல் அளிக்கும் நானு தாயாகிய உங்களுக்கு அளிக்க மறுப்பேன்? கேளுங்கள் தாயே, எது வேண்டினும் ஈகிறேன்.

குந்தி:—மகனே, நாளை நடைபெறும் போரில் நீ உன்னிடமுள்ள பாம்புக்கணையை அர்ச்சுனன் மேல் விடுவாயல்லவா?

கன்னன்:—ஆம் தாயே.

குந்தி:—ஒரு முறை பாம்புக் கணையை அர்ச்சுனன் மேல்விட்டு அவன் பிழைத்தால் மறுமுறை அதனை நீ அவன்மேல் செலுத்தலாகாது. இந்த வரம் ஒன்றை எனக்குத் தருவாயா?

கன்னன்:—அம்மா, இது ஒரு வரமா? இது அரசருக்குரிய கடமையல்லவா? ஒரு முறை ஓர் அம்பினை வில்லில் கோத்துப் பகைவன்மேல் எய்யலாம். அவன் அதற்குப் பிழைத்தால் மறுமுறையும்

அதனைப் பயன்படுத்தார் மன்னர்கள். அங்ஙனம் மீண்டும் அம்பினைக்கோத்து விடுதல் ஆண்மையும் அன்று; வல்லமையும் அன்று; பெருமையும் ஆகாது; தருமமும் ஆகாது. ஆகையால் ஒரு முறைதான் அவ்வம்பை அர்ச்சுனன் மேல் விடுவேன். நிற்க; தாங்கள் வேண்டும் வேறொரு வரம் யாதோ?

குந்தி:—அப்பா கன்னு, நீயே அறிவாய். உன் தம்பிகளுள் அர்ச்சுனனைத் தவிர மற்ற நால்வரும் உன்னுடன் போர்புரியத் தகுதியானவர்களல்லர். போர்க்களத்தில் நீ அவர்களுடன் போர்புரிய நேரின் அவர்களைக் கொல்லக் கூடாது. இந்த வரத்தை அருள் செய்வாயாக.

கன்னன்:—அம்மா, இவ்வரத்தையும் அளித்தேன். அர்ச்சுனனைத் தவிரப் பிற தம்பிமார்களைக் கொல்லேன்; இது சத்தியம். தாயே, எனக்கும் தாங்கள் இரு வரங்களைக் கொடுத்தருளல் வேண்டும், கொடுப்பீரா?

குந்தி:—என் அருந்தவப் புதல்வ, கேள், தருகிறேன். நான் ஆறுதலடைய இவையேனும் உதவும்.

கன்னன்:—தாயே, நான் போரில் அர்ச்சுனனல் கொல்லப்பட்டால் அவ்வமயம் நான் தங்கள் மகன் என்பதை உலகோர் அறியச் செய்ய வேண்டும்.

குந்தி:—மகனே, நீ இறக்கத்தான் வேண்டுமா? அங்ஙனம் விதி இருக்குமானல்...ஐயோ! என் உள்ளமும் உயிரும் துடிக்குமே. ஐயோ! உனக்கு முன் நான் இறக்கலாகாதா?

கன்னன்:—அம்மா, மற்ருெரு வரத்தையும் கேட்பீராக. நான் இறக்கும் வரை நான் யாரென்பதை என் தம்பிகளிடம் கூருதீர்கள். கூறுவீராளுல் அவர்கள் அரசு வேண்டாமென்று என்னிடம் ஒப்படைப்பர். யான் அதனை என் நண்பன் துரியோதனனுக்குத்தான் தருவேன். இதனை உறுதியாகக் கொள்க.

குந்தி:—கன்ன, நீ விரும்பியபடியே செய்வேன். நான் போய் வருகிறேன் (கண்களில் நீர் சொரியக் கன்னன் வீடு நீங்கிச் செல்லலாளுள்.)

அருஞ்சொற்கள்

பேறு	பரிந்து	ஆண்மை	அறம்	எய்ய
கன்னி	உற்றது	ஓங்கும்	மிஞ்சிய	ஆறுதல்
பணிவிடை	அடிவருடி	கருதி	அருமந்த	உறுதி
தொல்லை	ஏவல்	கானல்	சொரிய	கோத்து

விஞக்கள்

1. குந்தி கன்னனிடம் கூறிய வியப்பான செய்தி யாது?

2. கன்னனது பிறப்பு வரலாறு யாது?

3. 'அடாது செய்தவர் படாது பட்டனர்'-இதற்குக் கன்னன் கூறிய சான்று யாது?

4. குந்தியைத் தன் உண்மைத் தாய் என்பதைக் கன்னன் எங்ஙனம் அறிந்தான்?

5. குந்தி தன் தாய் என்பதை உணர்ந்த கன்னன் அவளைப் போற்றியதெங்ஙனம்?

6. குந்தி கன்னனிடம் வருந்திக் கூறியது யாது? கன்னனது விடை யாது?

7. குந்தி கன்னனைப் பாண்டவர் பக்கம் வருமாறு அழைத்ததெங்ஙனம்?

8. கன்னன் பாண்டவர் பக்கம் வரமுடியாமைக்குக் கூறிய காரணங்கள் யாவை?

9. குந்தி கேட்ட இரு வரங்கள் யாவை?

10. குந்திதேவியைக் கன்னன் கேட்ட வரங்கள் யாவை?

பயிற்சி

1. இந்த நாடகத்தை நடித்துப் பாருங்கள்.

2. பாண்டவர் ஐவரின் பெயரையும் அறிந்து கொள்ளுங்கள்.

3. வாக்கியத்தில் அமைத்து எழுதுக: - ஐயமற, சோதித்தறிய, நடைபெறும்.

4. இப்பாடத்திலுள்ள பழமொழிகளை எடுத்து வரைக. இவை போன்ற வேறு பாடத்துப் பழமொழிகளைப் பொறுக்கி வரைக.

இலக்கணம்

திணை:

பெயர்ச் சொற்களில் திணை, பால், எண், இடம், வேற்றுமை என்பனவற்றை அறிதல் வேண்டும். அதாவது பெயர்ச்சொல் திணை, பால், எண், இடங்களைப் பொருந்தி வேற்றுமை உருபேற்று வரும்.

மக்கள், தேவர்—உயர்திணை

பிற உயிர் உள்ளனவும் இல்லனவும்—அஃறிணை

(உ-ம்) மாடு, மரம், கல்.

பால்:

முருகன், பொன்னன்-ஆண்பால் }
வள்ளி, கண்ணகி-பெண்பால் } உயர்திணை
மாணவர், மக்கள்-பலர்பால் }

மாடு, மரம், கல்-ஒன்றன்பால் }
மாடுகள், மரங்கள், கற்கள்-பலவின்பால் } அஃறிணை

எண்:

கோவலன், கண்ணகி, மாடு-ஒருமை
மக்கள், மாடுகள், மரங்கள்-பன்மை
ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்-ஒருமை
பலர்பால், பலவின்பால்-பன்மை

இடம்:

பேசுவோன்-நான்—தன்மை
கேட்போன்-நீ—முன்னிலை
பேசப்படுவோன்-முருகன்-படர்க்கை
தன்மை ஒருமை-நான், யான்
தன்மைப்பன்மை-நாம், யாம், நாங்கள், யாங்கள்
முன்னிலை ஒருமை-நீ
முன்னிலைப்பன்மை-நீர், நீங்கள், நீவிர்
படர்க்கை ஒருமை-அவன், அவள், அது
படர்க்கைப்பன்மை-அவர், அவை

7. நீராவி கண்ட வரலாறு

உலகம் சுருங்கிக் கொண்டே வருகிறது. இதன் பொருளென்ன? கடுகிச் செல்லும் ஊர்திகளற்ற காலத்தில் உலகம் பெரிதாயிருந்தது. உலகின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் செல்லுவது இப்போது மிக எளிது. இன்று உண்டிக்குப்பின் உறங்கும் நேரத்திற்குள், ஓர் இடத்திலிருந்து மற்றொரு தொலை யிடத்திற்குச் சென்று சேரத்தக்க அளவு உலகம் சுருங்கியுள்ளது. விரைந்து செல்லும் இத்தகைய ஊர்திகள், அறிஞர் பலரால் படிப்படியாகத் தோற்றுவிக்கப்பட்டனவே யாகும். இச்சீரிய சான்றோர்களுள் ஒருவர் நீராவியைக் கண்டு பிடித்தார். அவர் இதனைக் கண்டது எங்ஙனம் என்பதை அறிவோம்.

சற்றேறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன் ஐரோப்பாக் கண்டத்தில் ஸ்காட்லந்து நாட்டில் கிரீநாக் என்னும் நகரில் ஓர் எளிய குடும்பத்தில் ஜேம்ஸ் வாட் என்பவர் பிறந்தார். பன்னிரண்டாவது வயதில் இவர் நீராவியின் வல்லமையை உணர்ந்து உலகினுக்கு உணர்த்தினர். இவர் நுண்ணிய அறிவைப் பெரிதும் பெற்றவர். விவிலிய நூலும் இசை நூலும் இவர் மனத்தைக் கவர்ந்த இனிய நூல்கள். இவர் எப்பொழுதும் எதனைப் பற்றியேனும் சிந்தித்துக்கொண்டே இருப்பார். அதனால் இவரை இவரது தாய் 'வீண்பொழுது கழிக்கும் வீணன்' என்று எண்ணிப் பிறரிடம் தன் ஆற்றாமையை எடுத்துரைப்பதுண்டு.

ஒரு நாள் கடுங்குளிர். ஜேம்ஸ் வாட்டின் தாய் கதவுகளையும் பலகணிகளையும் இழுத்து மூடினுள்; வீட்டிற்குள் விறகையடுக்கித் தீ மூட்டம் ஒன்றை உண்டாக்கினுள்; இரும்படுப்பில் ஒரு வெந்நீர்க் கெண்டியை வைத்துத் தண்ணீரைக் காய்ச்சித் தேநீர் போடத் துவங்கினுள். ஜேம்ஸ் வாட் தீயின் எதிரில் அசைவற்று உட்கார்ந்திருந்தார். வெந்நீரில் கொதிவரத் தொடங்கியது. கெண்டியின் மூக்கி லிருந்து ஆவி புறப்பட்டது. ஜேம்ஸ் எரிகின்ற நெருப்பையும், காய்கின்ற கெண்டியையும், அதனின்று வெளியேறும் நீராவியையும் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டே தம்மை மறந்து எதையோ எண்ணிக்கொண்டிருந்தார்.

ஜேம்ஸ் வாட்டின் தாயார் இதைக் கண்டாள். தன் மகன் உன்மத்தம் பிடித்தவன் போல் உட்கார்ந் திருப்பதற்குக் காரணத்தைக் காணுதவளாய்த் துடி துடித்தாள். நீராவி அவளுக்குப் புதிதன்று. தன் மகன் இமை கொட்டாமல் விழிபிதுங்க நீராவியைப் பார்த்துக்கொண்டிருந்தது அவளுக்குப் பெரும்வியப் பாக இருந்தது. 'என் பிள்ளையைப் போல் சோம்பேறி இவ்வுலகில் எவரேனுமுண்டோ?' என்று எண்ணிய வளாய், 'ஜெம்மி! ஜெம்மி! இப்படிவா; தேத்தண்ணீர் குடித்து விட்டுப்போ' என்றுள். ஜேம்ஸ் தம் தாய் வாக்கைப் புறக்கணியாமல் எழுந்து சென்று சொன் னபடி செய்தார். ஆயினும் அவர் எண்ணம் அந் தக் கெண்டியின் மூக்கின் வழியே வந்துகொண் டிருந்த நீராவியிலேயே இருந்தது.

கொதிக்கும் நீரினின்று வெளியாகும் நீராவி வெள்ளிய உருவத்துடன் வெளியாவதையும், அது

சுழன்றுசுழன்று ஆகாயத்தில் படலம்படலமாகப் படருவதையும், மேலே படர்ந்த ஆவி கண்ணுக்குத் தெரியாமல் மறைவதையும் கண்டு ஏதோ சிந்தனை யில் ஆழ்ந்தார் ஜேம்ஸ் வாட். சிற்சில வேளைகளில் கெண்டியின் மூடியை அந்த நீராவி மேலே கிளப்புவதையும் கண்டார்; உந்தித் தள்ளும் வல் லமை நீராவிக்கு இருப்பதை அவர் உணர்ந்தார்; இந்நீராவியைப் பயன்படுத்தும் முறைகள் எவை

ஜேம்ஸ் வாட்

யென ஆராயலானார். ஜேம்ஸ் வாட் தம் இளமையி லிருந்து விடா முயற்சியுடன் நீராவியைக்கொண்டு பல இயந்திரங்களை இயங்கச் செய்தார்; இயங்கும் பொறிகளின் உதவியால் பற்பல தொழில்களைப் பண்படச் செய்யலாம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினார். இவர் புகழ் உலகெங்கும் பரவியது. உல கம் உய்ய உறுதுணையாக இருந்த ஜேம்ஸ் வாட் அரசாங்கத்தாரால் போற்றப்பட்டார்.

இங்ஙனம் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி ஆற்றும் தொண்டுக்கு அளவில்லை. அது பழைய உலகத்தைப் புதிய உலகமாக மாற்றிவிட்டது. நெடு நாளைய கடற் செலவைச் சின்னாட் செலவாக மாற்றிவிட்டது; உணவுக்குரிய தானியங்களை அரைத்துக் கொடுத்து உதவுகின்றது; உடைகளை நெய்து மனிதனை மனிதனாக்குகிறது; பயிருக்குத் தண்ணீர் இறைக்கின்றது; பல வண்டிகளை ஒன்று சேர்த்து இழுத்துக்கொண்டு விரைந்து நெடுந் தொலை செல்லுகிறது. இன்னும் மனிதன் என்னென்ன செய்ய வேண்டுமென்று எண்ணுகின்றானோ அவற்றை யெல்லாம் இயற்றவல்ல பணியாளனாய் இருந்து உதவி புரிகின்றது. இத்தகைய வாழ்வை நமக்களித்த ஜேம்ஸ் வாட்டைப் போற்றுவது நம் கடமையாகும்.

அருஞ்சொற்கள்

சுருங்கி	நுண்ணிய	தொலையிடம்	உறுதுணை
கடுகி	உன்மத்தம்	அறிகுறி	இசைப்பது
ஊர்தி	நுண்ணறிவு	வீணன்	செலவு
விவிலிய நூல்	சீரிய	ஆற்றுமை	புறக்கணி

வினாக்கள்

1. உலகம் சுருங்கியுள்ளது என்பது எப்படி? அதற்கு உதவியோர் யாவர்?
2. ஜேம்ஸ் வாட்டின் வாழ்க்கைச் சுருக்கம் எழுதுக.
3. ஜேம்ஸ் வாட் நீராவியைக் கண்டது எப்படி?
4. 'என் பிள்ளையைப் போல் சோம்பேறி இவ்வுலகில் எவரேனுமுண்டோ?'—இடம் சுட்டுக.
5. நீராவி ஆற்றும் தொண்டுகள் யாவை?

பயிற்சி

1. நீராவி வெளியாவதை உன் வீட்டில் சமையல் செய்யும் இடத்திற்குச் சென்று கவனிக்கவும்.

2. புகைவண்டித் தொடர் எப்படிச் செல்லுகிறது என்பதைத் தெரிந்துகொள்க.

3. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:- நாளடைவில், ஒருவருக்குப் பின் ஒருவர், புறக்கணியாமல்.

இலக்கணம்

வேற்றுமை:

முருகன் வந்தான்

முருகனை இருக்கச் சொல்—ஐ

முருகனால் எழுதப்பட்டது—ஆல்

முருகனுக்குக் கொடு—கு

முருகனில் பெரியவன்—இல்

முருகனது கண்ணாடி—அது

முருகனிடம் இரு—இடம்

முருகா வா

ஐ, ஆல், கு, இல், அது, இடம்-என்பன வேற்றுமை உருபுகள். இவையே சொற்களின் பொருளை வேறு படுத்துகின்றன.

முதல் வேற்றுமை—இது எழுவாய் வேற்றுமை. இதற்குத் தனி உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை—'ஐ'-ஒன்றே

மூன்றும் வேற்றுமை —ஆல், ஒடு, ஓடு, உடன்

நான்காம் வேற்றுமை —'கு' ஒன்றே

ஐந்தாம் வேற்றுமை —இல், இருந்து, நின்று

ஆரும் வேற்றுமை —அது, அ, உடைய

ஏழாம் வேற்றுமை —கண், இல், மேல், இடம்

எட்டாம் வேற்றுமை—இது விளிவேற்றுமை. இதற்குத் தனி உருபு இல்லை. ஆனல் இது பின் வருமாறு மாறுதல்கள் அடையும் :—

முருகன்—முருக!-'ன்' கெட்டது.

முருகன்—முருகா!-ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டது.

மகன்—மகனே!-ஈற்றில் ஏகாரம் மிக்கது.

பிள்ளை—பிள்ளாய்!-ஈறு திரிந்தது.

பயிற்சி

1. இப்பாடத்திலிருந்து எட்டு வேற்றுமைகளுக்கும் உதாரணங்கள் தருக.

2. யானை, பெட்டி, புலவர், பொன்னி-இவைகளுடன் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.

3. தந்தை, கிளி, அண்ணன், தங்கை-இவற்றை விளி வேற்றுமையாக்குக.

4. அன்னய், வேலா, குழந்தாய், மக்காள்-இவற்றைப் படர்க்கைப் பெயராக்குக.

5. கோடிட்ட இடங்களில் ஏற்ற வேற்றுமை உருபுகளை வரைக:—

(அ) அவன் பெட்டி—பணம் இருக்கிறது.

(ஆ) குமரன் பள்ளி—வந்தான்.

(இ) இது என்—நெய்யப்பட்டது.

(ஈ) தலை—எண்ணெய் தடவு.

(உ) இது வள்ளி—பலகை.

———

TB
031(8)
N57

8. சுகிர்லாபம்

பஞ்ச தந்திரங்களுள் ஒன்று சுகிர்லாபம் என்பது. பஞ்ச தந்திரங்களாவன—மித்திரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்ரகம், அர்த்த நாசம்,அசம்பிரேட்சிய காரித்துவம் என்பன. மித்திரபேதம் என்பது நட்பினைப் பிரித்தல். சுகிர்லாபம் என்பது நட்பினைப் பெறுதல். சந்திவிக்ரகம் என்பது அடுத்துக் கெடுத்தல். அர்த்த நாசம் என்பது பெற்றதை இழத்தல். அசம்பிரேட்சிய காரித்துவம் என்பது ஆராயாது செய்தல்.

அறிவாளிகளான நண்பர்கள் தங்களிடம் செல்வம் முதலியன இல்லையானாலும் சமயம் வரும்போது ஒருவரை ஒருவர் காப்பாற்றுவர். இதனை விளக்குவதே காகம், எலி, ஆமை, மான் ஆகியவற்றின் கதையாகும். இது சோமசன்மா என்பவர் அரசரின் மக்களுக்குக் கூறிய சுகிர்லாபம் என்னும் இரண்டாம் தந்திரமாகும்.

ஒரு பெரிய வன்னிமரத்தில் இலகுபதன் என்னும் காகம் வசித்து வந்தது. அம்மரத்தின் கீழ் ஒரு வேடன் தானியங்களை இறைத்து வலை யொன்றைக் கட்டினான். அப்போது சித்திரக்கிரீவன் என்னும் புருவரசு தன் பரிவாரத்தோடு அம்மரத்தில் வந்திறங்கியது. அதன் பரிவாரங்கள், அங்கே சிதறிக் கிடந்த தானியங்களை உண்ணலாம் எனக் கூறின. சித்திரக்கிரீவன், 'ஆள் நடமாட்ட மற்ற இக்காட்டில் தானியம் வரும் வழி ஒன்று மில்லை. இது ஏதேனும் சூழ்ச்சியாக இருக்கும்' என்று கூறிற்று. அதனைக் கேட்காமல் புருக்கள்

14696.

பறந்து சென்று வலையில் அகப்பட்டுக் கொண்டன. உடனே தன் பரிவாரத்தை விட்டுப் பிரிய மனமில்லாத அவ்வரச புருவும் வலையில் அகப்பட்டுக் கொண்டது. பிறகு சித்திரக்கிரீவன் ஆணைப்படி அவை வலையோடு கூட மேலெழும்பிப் பறந்தன. அவை நெடுந்தூரம் சென்று இரணியகன் என்ற எலியின் வளையினருகே இறங்கின. புருவரசு கூப்பிட எலி வந்து அப்பறவைகள் அகப்பட்ட வலையைப் பல்லினுற்கடித்து அவற்றை விடுவித்தது.

இலகுபதன் புருக்களின் செயலைக் கண்டு வியப்பு அடைந்தது. அதனுல் அக்காகம் புருக்களைப் பின் தொடர்ந்து வந்தது. புருக்கள் பறந்து சென்ற பின் இலகுபதன் இரணியகனை நோக்கி, 'நானும் உன் நட்பை விரும்புகிறேன். என்னை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று மன்ருடியது. இரணியகன், 'உனக்கும் எனக்கும் நட்பு ஏற்படுவது தகுதியன்று. அது கூடா நட்பாகும்' என்று பல அறங்களை எடுத்துக் கூறியது. இலகுபதன் தன்னைக் கண்டஞ்சிய சுண்டெலிக்கு உறுதிமொழி கொடுத்தது. மேலும், "நான் உன்னுடன் நட்பாயிருந்தால் தான் உயிர்வாழ்வேன். இல்லையேல் பட்டினியிருந்து சாவேன்" என்று சூளுரைத்தது. காகத்தின் உள்ளத்தை அறிந்த எலி அதனுடன் நட்புக் கொள்ளச் சம்மதித்தது. இரண்டும் ஒன்றற்கொன்று ஆகாரம் கொடுத்துக் கொண்டு அக்காட்டிலேயே இருந்தன.

இங்ஙனம் இருக்கும் நாளையில் ஒரு நாள் காகம் எலியின் வளைக்கு வந்தது; தன் நண்பனை அழைத்து, "நண்பா, இக்காட்டில் உணவு கிடைப்பது கடினமா

யிருக்கிறது. நான் என் நண்பன் மந்தரன் என்னும் ஆமை வசிக்கும் தடாகம் உள்ள காட்டிற்குச் செல்லப் போகிறேன்" என்றது. இரண்யகன் தானும் வருவதாகச் சொல்லவே, இலகுபதன் இரண்யகனை எடுத்துக் கொண்டு மந்தரன் வசிக்கும் காட்டை அடைந்தது. அங்கு இரண்யகனை மந்தரனுக்கு அறிமுகம் செய்து வைத்தது. மந்தரனும் எலியினிடம் நட்புக் கொள்ள விரும்பி நட்புக் கொண்டது.

அவை நட்புடன் வாழ்ந்து வருங் காலத்தில் ஒரு நாள் ஒரு மான் பயந்துபயந்து மந்தரன் இருக்கும் தடாகத்திற்கு வந்தது. மந்தரன் அதனை நோக்கி, 'நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டது. அது, 'என் பெயர் சித்திராங்கன். நான் வேடருக்கஞ்சி இங்கு வந்துள்ளேன். நீ தான் உதவவேண்டும்' என்றது. மந்தரன் அதற்கு அடைக்கலம் கொடுத்தது. மானும் காகம், எலி, ஆமை ஆகியவற்ரேடு நட்புப் பூண்டு அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் மான் வழக்கம்போல் மேயச்சென்றது. அந்திநேரம் ஆகியும் திரும்பவில்லை. இதனை அறிந்த பிற பிராணிகள் நண்பனுக்கு என்ன நேர்ந்ததோ என வருந்தின. விடிந்ததும் காகம் பறந்து சென்று பலவிடங்களையும் பார்த்தது. மான் வேடன் வலையில் அகப்பட்டுள்ளதைக் கண்டது; மனம் வருந்தியது. அது உடனே வந்து தன் நண்பர்களிடத்துச் சொல்ல, அவை மான் அகப்பட்டுள்ள இடத்திற்கு விரைந்து சென்றன. இரண்யகனை நோக்கி, 'வேடன் வருவதற்கு முன்னுல் மான் அகப்பட்டுள்ள வலையைக் கத்தரித்திடுக' என்று மற்றவை வேண்

டின. அது அங்ஙனமே வலையைக் கத்தரித்து முடித்தது. வேடனும் வந்தான். மான் எழுந்து ஓடி மறைந்தது. காகம் கடுகிச்சென்று மரத்தில் அமர்ந்தது. எலி அங்குக் காணப்பட்ட வளையினுள் ஓடி ஒளிந்தது. ஆமை மட்டும் புகலிடம் ஒன்று மின்றித் தன் இயற்கையின்படி மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. ஏமாற்றம் அடைந்த வேடன் அந்த

வேடன் ஏமாறல்

ஆமையை எடுத்து வில்லின் நாணிற் கட்டிக் கொண்டு புறப்படலாயினன்.

மந்தரனை இழக்க மற்றப் பிராணிகள் விரும்புமா? அவை கூடி ஒரு சூழ்ச்சி செய்யலாயின. வேடன் செல்லும் வழியில் நீர் நிரம்பிய ஏரி ஒன்று இருந்தது. அங்கு வசதி மிகுந்த இடம் ஒன்றில் மான் இறந்தது போல் படுத்தது. காகம் இறந்த மிருகத்தைக் கொத்துவதுபோல மானின்மேல் உட்கார்ந்து கொத்தத் தொடங்கியது. எலி தயாராக ஓரிடத்தில்

ஒளிந்து கொண்டிருந்தது. மானைத் தவற விட்ட வேடன் வழியில் இறந்து கிடக்கும் மானைக் காணவே அதனை எடுத்துச் செல்லலாம் என்று எண்ணினான்; மந்தரனைக் கட்டோடு கீழேவைத்து விட்டு மானிடம் சென்றான். அச்சமயத்தில் இரண் யகன் விரைந்து வந்து மந்தரனைக் கட்டியிருந்த வில்லின் நாணைப் பற்களால் கடித்து அறுத்தது.

ஆமை நகர்ந்து சென்று ஏரிக்குள் குதித்துத் தப்பியது. வேடனைக் கண்ட காகம் பறந்துசென்றது. மானும் எழுந்து மாயமாய் ஓடி மறைந்தது. வேடன் 'வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்த வள் போல்' வருந்தினான். "கைக்கு வராத பெரிய பொருளை விரும்பிக் கையிலிருந்த சிறிய பொருளை யும் இழந்தேனே. அதிக ஆசை அதிக நஷ்டம். கிட்டியது போதும் என்று நினைப்பவனே அறி வாளி" என்று எண்ணியவனாகித் தன் வீடு சேர்ந் தான்.

காகமும், ஆமையும், மானும், எலியும் மிகவும் மகிழ்ந்து முன்போல் ஒற்றுமையாக வாழ்ந்திருந் தன.

அருஞ்சொற்கள்

பஞ்சதந்திரம்	உறுதிமொழி	அந்திநேரம்	கிட்டியது
பரிவாரம்	சூளுரைத்து	நலிந்து	அறிவாளி
ஆணை	அஞ்சி	புகலிடம்	நகர்ந்து
மன்றாடியது	கூடா நட்பு	மாயமாய்	நட்புப்பூண்டு

வினாக்கள்

1. சுகிர்லாபம் என்பது யாது? அதை விளக்கும் கதை எவற்றைப் பற்றியது?

2. பஞ்சதந்திரங்கள் யாவை? விளக்கி வரைக.

3. புருக்கள் வலையிலகப்பட்டது எப்படி? அவை விடுதலை பெற்றது எப்படி?

4. இலகுபதன் எலியிடம் நட்புப்பெற விரும்பியதேன்?

5. இலகுபதன் இரண்யகனிடம் எப்படி நட்புப் பெற்றது?

6. மந்தரன் நட்பினை இலகுபதனும் இரண்யகனும் பெற்றது எங்ஙனம்?

7. வேடனிடம் மந்தரன் அகப்பட்டதெப்படி?

8. மந்தரன் விடுவிக்கப்பட்ட விதம் யாது ?

9. அறிவாளி என்பவன் யார்?

பயிற்சி

1. பஞ்சதந்திரக் கதைகளைப் படிக்கவும்.

2. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

அந்திநேரம், சூளுரைத்து, உறுதிமொழி.

3. இக்கதையை இலகுபதன் என்னும் காகம் கூறியது போலக் கூறுக.

இலக்கணம்

வினைச்சொல்:

செங்குட்டுவன் வடநாடு **சென்று எதிர்த்த** வடவரை **வென்றான்.**

வென்றான்-**வினைமுற்று;** சென்று-**வினையெச்சம்.** எதிர்த்த-**பெயரெச்சம்.**

வினைச்சொல் மூன்று வகைப்படும்.

பெயர் எஞ்சி நிற்பது பெயரெச்சம்.

வினை எஞ்சி நிற்பது **வினையெச்சம்.**

எஞ்சி நிற்றல்-குறைந்து நிற்றல்.

பெயரெச்சம் பெயரைக்கொண்டு முடிவது.

வினையெச்சம் வினையைக்கொண்டு முடியும்.

9. குற்றாலம்

நம் பாரதநாடு எழில் மிகுந்த நாடு. இமயம் முதல் குமரி வரை அழகு மிக்க மலைகளும் குன்று களும் இந்நாட்டில் நிறைந்துள்ளன. இயற்கைக் காட்சிகள் மிக்க காடுகள் பல கவின் பெற்று விளங் குகின்றன. என்றும் வற்றாத ஆறுகள் பல ஆருயிர் ஓம்பி ஓடுகின்றன. இவையே பண்டைக் காலத்தில் நம் நாடு வந்த பிற நாட்டினரைக் கவர்ந்தன; அவர்களை நம் நாட்டிலேயே தங்கவும் செய்தன.

தென் பாண்டி நாட்டில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலை கண்களைக் கவரும் காட்சிகள் பல வற்றைப் பெற்று மிளிர்கின்றது. இத்தொடரில் உள்ள ஒரு பகுதியே பொதியமலை. இது தற்கால முள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து அத னைச் சிறப்பிக்கின்றது. தமிழ் முனி என்று போற்றப் பெறும் அகத்தியர் வாழ்ந்த இடம் பொதியமலை என்று நம் நூல்கள் பல சாற்றுகின்றன. அதனா லேயே இதற்கு அகத்திய மலை என்னும் பெயர் ஒன்றும் உண்டாயிற்று. இதனையே திருக்குற்றால மலை என்றும் கூறுவர்.

இத்திருக்குற்றாலம் தென்காசி என்னும் புகை வண்டித் தொடர் நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ளது. அங்கிருந்து பல ஊர்திகளின் உதவியால் குற்றாலத்திற்குச் செல்லலாம். ஆனி, ஆடி மாதங்களைச் சாரல் காலம் என்று செப்புவர். இக்காலத்தில் மக்கள் இங்கு வந்து தங்குவர். தங்கு வதற்கேற்ற மாளிகைகள் பல இங்குள்ளன. மக்கள்

சேரும் இடங்களில் பல கடைகள் காணப்படுவது இயல்பே அல்லவா?

திருக்குற்றாலம் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. சம்பந்தரும் நாவுக்கரசரும் தம் தேவாரங்களில் அத



குற்றாலம் நீர்வீழ்ச்சி

னைப்பற்றிப் பாடி இருக்கின்றனர். மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் பக்திச் சுவை சொட்டச் சொட்டத் திருக்குற்றாலத்தைப் பாடியிருக்கின்றார். குற்றாலத்தில் உறையும் இறைவனைத் திரிகூட நாதர் என்பர்; இறைவியைக் குழல்வாய் மொழியம்மை

என்று கூறுவர். குற்றாலம் சென்று தங்குபவர் அங் குள்ள அருவியில் நீராடுவர்; குற்றாலக் கூத்தனைப் பாடிப் பரவிப் பணிவர்.

குற்றால மலையில் பல அருவிகள் இருக்கின்றன. அவற்றுள் கோவிலின் பக்கத்தில் விழும் அருவியே அச்சமின்றி நீராடற்குரியது. அதனையே குற்றால நீர் வீழ்ச்சி என்பர். அங்கு நீராடுதற்கு வசதியாக இரும் புக் கம்பிகளால் பாதுகாப்புகள் செய்யப்பட்டிருக் கின்றன. நீராடச் செல்வோர் தலையில் நிரம்ப எண் ணெய் தேய்த்துக் கொள்வர். தலையில் தேய்த்த எண்ணெயைச் சிகைக்காய் இன்றியே அருவி நீரின் விரைவு போக்கிவிடுகின்றது.

திருக்குற்றால மலையின்மேல் ஏறிச் சென்றால் அருவி நீர் பொங்கி விரிந்தெழும் காட்சியைக் காண லாம். இது கண்கொள்ளாக் காட்சியாகும். இன்னும் சிறிது தொலைவு சென்றால் சண்பகாடவி என்னும் அருவியைக் காணலாம். அங்கு ஒரு கோவில் இருக்கி றது. அது சண்பகாதேவி அம்மன் கோவில். அதனை யடுத்துப் பல சிறுசிறு குகைகளைக் காணலாம். பற் றற்ற முனிவர்கள் பரம்பொருளை நாடித் தவமிருந்த தவச்சாலைகள் அவையெனச் சான்றோர் சாற்றுகின்ற னர். மேலும் அத்தகைய குகைகளுள் ஒன்றில்தான் தமிழ் தந்த முனிவன் அகத்தியன் வாழ்ந்ததாகச் சொல்லுகின்றனர். இக்காலத்திலும் ஒரு சிலர் அங்குச் சென்று தவம் செய்து வருகின்றனராம்.

இதற்கு மேலும் மலைமேல் செல்வோர் தேன் அருவி என்னும் ஓர் அருவியைக் காணலாம். இவை யேயன்றிக் குற்றால மலையில் சிற்றருவி ஐந்தருவி என்பன போன்ற பிற அருவிகளும் இருக்கின்றன.

இத்தகைய நீர் வளப்பமிக்க மலையில் உள்ள காடுகள் 'கைபுனைந்து இயற்ருக் கவின்' பெற்று விளங்குகின்றன என்பதில் ஐயமுண்டா? உயர்ந்து தன்னிகரின்றி இருக்கும் மலையடுக்குகள் தோறும் பல்வகைமரங்களைக் காணலாம். மரங்களை ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்துப் பிணிப்பனபோன்று பைங்கொடிகள் இருக்கின்றன. வானளாவி நிற்கும் வளமார்ந்த மரங்கள் பகலவன் கதிர்களை மறைத்துக் குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. மரங்கள் கொடிகள் செடிகள் ஆகியவற்றிலிருந்து கீழே சொரியப்பட்ட மலர்கள் பன்னிறங்களாலான பாயல்போல் தோன்றும். வண்டினங்கள் தேனையுண்டு எழுப்பும் பண் ஒலி உள்ளத்தை ஈர்த்து ஒருவழிப்படுத்தும்.

குற்ருலத்தின் இயற்கை எழிலுக்கு ஏற்றவாறே தட்பவெப்ப நிலையும் துணை செய்கின்றது. சிறு தூறல், பெருமழை, இளம் வெயில் ஆகிய இவை அங்கு மாறிமாறித் தோன்றுகின்றன. கடும் வெயிலால் களைப்படைந்த மக்களுக்குக் குற்ருலத்தின் தட்பவெப்பநிலை மருத்துவம் செய்கின்றது என்று கூறலாம்.

இனிக் குற்ருலக் குறவஞ்சி என்ற நூலின் ஆசிரியர் எடுத்துரைக்கும் குற்ருலக் காட்சி யொன்றைக் காண்போம்: வளம் பொருந்திய சோலையில் தென்னை, பாக்கு, மா, பலா முதலிய மரங்கள் இருக்கின்றன. கனிதரும் மரங்களில் கொத்துக் கொத்தாகப் பழங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இச்சோலையில் குரங்குகளுக்குப் பஞ்சமேது? அவை நிரம்ப இருக்கின்றன; அங்கும் இங்கும் ஓடிஓடித் தாவுகின்றன. அவற்றுள் வானரங்கள் பழங்களைப் பறித்துத் தங்கள்

தங்கள் மந்திகளுக்குக் கொடுக்கின்றன; அவற்றுடன் கொஞ்சிக் குலாவுகின்றன. மந்திகளின் கைகளிலிருந்து விழும் கனிகளை எடுத்துக்கொள்ளப் பெரிய குரங்குகள் அவற்றைக் கெஞ்சுகின்றன. வேருெரு பக்கத்தில் ஒரு பருத்த குரங்கு தேமாவின் பழங்களைப் பந்துபோல எண்ணிப் பந்தடிக்கிறது. ஒரு சில மந்திகள் தம் வயிற்றைக் கட்டிக் கொண்டிருக்கும் குட்டிகளோடு மரத்துக்கு மரம் தாவுகின்றன.

இங்ஙனம் இயற்கை வளம் பெற்றுத் திகழுவது திருக்குற்ருலம். அதனைக் கண்டு துய்த்தல் வேண்டுமேயன்றிப் படித்துச் சுவை அறிய முடியாது. திருக்குற்ருலம் சென்று அருவியில் குளிர்ச்சி பெற நீராடல் நல்லது. அது உடல் நலத்தை நல்கும். இன்பச் செலவு மேற்கொள்ளும் மாணவ மாணவியர் அங்குச் செல்லும் வாய்ப்பைப் பெறுதல் வேண்டும்.

அருஞ்சொற்கள்

எழில்	சாரல்	பற்றற்ற	பண் ஒலி
கவின்	வீழ்ச்சி	பரம்பொருள்	மந்தி
ஓம்பி	பரவி	கைபுனைந்து	துய்க்கும்
சாற்று	விரைவு	இயல்பு	ஒப்பிட்டு

வினக்கள்

1. பிறநாட்டாரைக் கவர்ந்த காட்சிகள் யாவை?

2. திருக்குற்ருல மலைக்குரிய வேறு பெயர்கள் யாவை? அது எங்குள்ளது?

3. சாரல் காலம் என்பது யாது? அக்காலத்தில் குற்ருலம் எங்ஙனம் இருக்கும்?

4. குற்ருலத்தில் கோவில் கொண்டருளிய இறைவனைப்பற்றியும் கோவிலைப் பற்றியும் வரைக.

5. குற்றால அருவியைப் பற்றி வரைக.

6. சண்பகாடவி என்னும் அருவியைப் பற்றி யாது அறிவாய்?

7. குற்றாலமலையில் உள்ள அருவிகள் யாவை?

8. குற்றாலமலையில் உள்ள காடுகளைப்பற்றி வரைக.

9. குற்றாலத்துத் தட்ப வெப்ப நிலை எங்ஙனம் உள்ளது?

10. குற்றாலக் காட்சி ஒன்றை விவரித்து வரைக.

பயிற்சி

1. உங்கள் பள்ளியிலிருந்து குற்றாலத்திற்கு இன்பச் செலவு போக முயற்சி செய்க. நீயும் அதில் சேர்ந்து குற்றாலக் காட்சியைக் காண்க.

2. குற்றாலக் காட்சிகளைக் காட்டும் படங்களைச் சேர்த்து ஒட்டி வைக்கவும்.

3. குற்றாலத்தைப் பற்றிக் கூறும் பாடல்களைச் சேகரித்து ஓர் அழகிய குறிப்பேட்டில் எழுதி வைக்கவும்.

4. பின் வரும் தொடர்களை அறிந்துகொள்க. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—

சொட்டச்சொட்ட, வளமார்ந்த, மாறிமாறி,
அங்கும் இங்கும், ஓடிஓடி, தங்கள் தங்கள்.

இலக்கணம்

சொல்லின் உறுப்புகள்:—பகுதி, விகுதி, இடைநிலை முதலியன.

உண் - என்னும் வேர்ச் சொல்லிலிருந்து **உண்டான்** என்ற சொல் உண்டாயிற்று. **இது பகுதி** என்று கூறப்படும். இதிலிருந்து வினையெச்சம் பெயரெச்சம் முதலிய பிற சொற்களும் உண்டாகும். (உ - ம்) உண்ட, உண்டு.

உண்டான் என்னும் சொல்லில் **உண்** - என்பது பகுதி. இது முதலில் இருக்கிறது. ஈற்றில் **ஆன்** என்பது இருக்கிறது. இது விகுதி எனப்படும்.

மீண்டும் உண்டான் என்ற சொல்லைப் பார்ப்போம். உண், ஆன் என்ற இரு உறுப்புகளைத் தவிர வேறொன்றும் உள்ளது. அது 'ட்' என்பது. அதனை இடைநிலை என்பர்.

பகுதி - தொழிலைக் கட்டளை இடும் பொருளில் காட்டும்.

விகுதி - ஐம்பால் மூவிடங்களைக் காட்டும்.

இடைநிலை - காலம் காட்டும்.

இவற்றை அடியிற்கண்ட உதாரணங்களிலிருந்து அறிந்துகொள்க:

சொல்	பகுதி		இடைநிலை		விகுதி
செய்தான்	செய்	+	த்	+	ஆன்
பாடினாள்	பாடு	+	இன்	+	ஆள்
எழுதினார்	எழுது	+	இன்	+	ஆர்
ஓடுகிறது	ஓடு	+	கிறு	+	து
ஓடினேன்	ஓடு	+	இன்	+	ஏன்
ஆடினாய்	ஆடு	+	இன்	+	ஆய்
தேடினார்	தேடு	+	இன்	+	ஆர்

இறந்தகால இடைநிலை—த், ட், ற், இன்.

நிகழ்கால இடைநிலை—கிறு, கின்று, ஆநின்று.

எதிர்கால இடைநிலை—ப், வ்.

பயிற்சி

1. பகுதி, விகுதி, இடைநிலைகளைப் பிரித்துக் காட்டுக:

திருடினான்	பாடினான்	வெல்வான்
எழுதுகிறாள்	செல்வான்	ஆடுவேன்
நின்றாள்	தின்றாள்	படிக்கிறோம்
படித்தாள்	ஆடினாள்	எழுதினார்

2. இப்பாடத்தில் உள்ள வினைச்சொற்கள் பத்தினைக் கூறி அவற்றிற்குப் பகுதி விகுதி கூறுக.

10. நாடகக் கலை

ஆய கலைகள் அறுபத்து நான்கினில் நாடகக் கலையும் ஒன்று. உரையாடல்களாலும் செயல் களாலும் ஒரு கதையின் பொருளைப் பிறர் காண அரங்கத்தில் நடித்துக் காட்டுவது நாடகம். நடி கன் ஒருவன் தான் ஏற்று நடிக்கும் பாத்திரத்தின் இயல்புகளைக் காண்போர் கருத்தைப் பிணிக்கும் வண்ணம் வெளியிடுகின்றான். இதனாலேயே இது பிற கலைகளைக் காட்டிலும் சிறந்த தென்று கரு தப்படுகிறது.

அமிழ்தினும் இனிய செழுந் தமிழ் மொழியில் இயல், இசை, நாடகம் என முக்கூறுபாடுகள் இருக்கின்றன. அவற்றுள் நாடகத்தின் இடம் இறு தியில் இருக்கக் காணலாம். நாடகத்திற்கு இய லும் தேவை, இசையும் தேவை. இவை இரண் டும் இரு கண்களெனத் தக்கன. இயல் தமிழ் நாடகங்களுக்கு உரிய சொல்லோவியங்களை வாரி வழங்குகின்றது; கருத்தைச் செவ்வனே, காண் போர் செவிப்புலனில் செலுத்தி உள்ளத்தை ஒரு வழிப்படுத்த உதவுகின்றது. இசையோ நாடகம் காண்போர் உளத்தை இனிமை பொருந்திய பாக்க ளால் அயர்வின்றி அமையச் செய்கிறது.

நாடகக் கலைக்கு இன்றியமையாது வேண்டப் படுவது நடிப்பு. அது ஒன்பான் சுவைகளுக்கு ஏற்ற வண்ணம் நடைபெறல் வேண்டும். இதனை மெய்ப்பாடு என்பார் தொல்காப்பியர். உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் மெய்யினால் பிறர் காண அறிவிக்கும் ஒருவகை

ஆற்றல் இது. நாடகத்தினால் கேள்வி இன்பத்தோடு காட்சி இன்பத்தையும் பெற வியலும். ஒருவனைத் தன்னை மறந்து இன்பம் பெறச் செய்யும் தகுதி நாடகத்துக்கு உண்டு. ஓய்வின்றி உழைக்கும் உடலுழைப்புத் தொழிலாளி தன் கலை தீரக் கண்டு கேட்டு மகிழுமாறு செய்யும் தன்மை நாடகத்திற்கு உண்டு.

தமிழகத்தில் பண்டைக்கால முதலே நாடகங்கள் நடைபெற்று வந்தன. ஆயினும், இக்காலத்தைப் போல நாடக அரங்குகளும், காட்சிகள் கொண்ட திரைச் சீலைகளும் அக்காலத்தில் இல்லை. இறைவன் உறையும் கோவில்களில் விழாக் காலங்களில் நாடகங்கள் நடைபெற்று வந்தன. கல்லாதோரும் நன்னெறிகளைக் கற்கும் வண்ணம் அக்காலத்தில் நாடகங்கள் அமைந்திருந்தன.

பழங்காலத்தில் இந்த நாடகம் கூத்து என்னும் பெயர் பெற்றிருந்தது. அது இசையுடன் கூடிய பாட்டிற்குப் பொருள் கூறும் வண்ணம் அபிநயமாகவே இருந்தது. நாம் அதைத் தற்காலத்தில் நாட்டியம் அல்லது நடனம் என்று கூறுவோம். இது நாளடைவில் கதை தழுவிய நாட்டியமாக மாறியது. கதை தழுவிய நாட்டியத்தில் ஒரே நடிகன் ஒரு கதையினைச் சொல்லாலும் மெய்ப்பாட்டினாலும் அறிவிப்பான். பின்னரே நாம் இன்று காணும் நாடகம் தோன்றிற்று.

மூவகைத் தமிழைப் பெற்ற நம் நாட்டில் பண்டைக்கால நாடக நூலாக இப்போது கிடைப்பது சிலப்பதிகாரம் ஒன்றே யாகும். சிலப்பதிகாரத்தில்

நாடகத்திற்குரிய இலக்கணங்கள் நன்கு கூறப்பட்டுள்ளன. அவற்றை நோக்குங்கால், பண்டைத் தமிழுலகில் நாடக நூல்கள் மலிந்திருக்க வேண்டுமென்பதை ஐயமின்றி அறியலாகும். நம் மன்னர்கள் நாடகத் தமிழை ஏற்ற வழியில் போற்றிக் காத்து வந்தனர் என்பதை, 'இராஜராஜேசுவர நாடகம்' 'பூம்புலியூர் நாடகம்' என்னும் பெயர்களால் நாம் நன்கு அறியலாகும். பள்ளு, குறவஞ்சி என்னும் நூல்வகைகளும் நாடக நூல்களேயாகும்.

பதினெட்டாம் நூற்ருண்டில் நாடகம் ஒரு சிறிது முன்னேறிற்று. அருணுசலக் கவிராயர் என்பவர் இராம நாடகக் கீர்த்தனை என்னும் நூல் இயற்றினுர். பாரதக் கீர்த்தனை, சகுந்தலை நாடகம், அரிச்சந்திர நாடகம் முதலிய நாடக நூல்கள் பின்னர் இயற்றப்பெற்றன. இவை மக்கள் திரள்திரளாகக் கூடும் திருவிழாக் காலங்களில் கோவில்களிலும் பிற விடங்களிலும் நடித்துக் காட்டப்பெற்றன.

ஆங்கிலக் கல்வி நம் நாட்டு நாடகக் கலையை இன்னும் ஒருபடி முன்னேறச் செய்தது என்று கூறலாம். வடமொழியிலிருந்தும் சில நாடகங்கள் மொழி பெயர்க்கப் பெற்றன. பரிதிமாற் கலைஞர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோர் தமிழ்மொழிக்கான நாடக இலக்கணங்களை வகுத்துள்ளனர் ; நாடகங்களும் எழுதியுள்ளனர். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களது 'மனேன்மணி' நாடகம், நாடக நூல்களில் தனிச் சிறப்புடைய தொன்ருகும்.

இப்போது நாடகம் இல்லாக் குறையைப் போக்கிய பெரியார் திரு. ப. சம்பந்த முதலியார் ஆவர்.

இவர் தாமியற்றிய நாடகங்களில் நடிப்பதுமுண்டு. செந்தமிழ் மாணவர்கள் பள்ளியாண்டு விழாக்காலம் முதலியவற்றில் நாடகங்களில் பங்கு கொண்டு நாடகக் கலையைப் போற்ற வேண்டும். இதனால் இக்கலை பெருமையுறும். தமிழன்னையும் இழந்த அணிகளைப் பெறுவாள்.

அருஞ்சொற்கள்

ஆய	கூறுபாடு	அயர்வின்றி	மலிந்து
அரங்கம்	இறுதி	மெய்ப்பாடு	திரள் திரளாக
பிணிக்கும்	செல்வன்	ஓய்வின்றி	முன்னேற
இயல்	செவிப்புலம்	கூத்து	வகுத்து
இசை	ஒருவழி	திரைச்சீலை	தனிச்சிறப்பு

வினாக்கள்

1. கலைகளுள் நாடகக் கலை சிறந்ததெப்படி ?

2. தமிழின் முக்கூறுபாடுகள் யாவை ? நாடகம் இறுதியில் அமைந்துள்ளதின் அழகு யாது ?

3. இயல், இசை, நாடகம்—விளக்கி வரைக.

4. நாடகக்கலைக்கு இன்றியமையாதது யாது ? அதனது பெருமை யாது ?

5. பண்டைக்கால நாடகங்களின் இயல்புகள் யாவை?

6. தொடக்கத்தில் நாடகத்தின் நிலை யாது ?

7. இப்போது கிடைக்கும் பண்டைய தமிழ் நாடக நூல் யாது ?

8. பண்டைக்காலத்தில் நாடக நூல்கள் இருந்தனவென்பதற்கான சான்றுகள் தருக.

9. பதினெட்டாம் நூற்றுண்டில் நாடகங்களின் முன்னேற்றம் யாது ?

10. ஆங்கிலக் கல்வியால் தமிழ் நாடகம் பெற்ற நன்மைகள் யாவை ?

11. நாடகம் இல்லாக்குறையைப் போக்கிய இக்கால நாடக ஆசிரியர் யாவர் ?

12. மாணவர் கடமை யாது ? ஏன் ?

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்தெழுதுக : செவிப்புலம், அயர்வின்றி, ஓய்வின்றி, திரள்திரளாக, தனிச்சிறப்பு, பங்கு கொண்டு, நோக்குங்கால்.

2. இப்புத்தகத்திலுள்ள நாடகத்தை நடித்துக் காட்டுக.

3. நுமது சமூகக்கலைப் பாடத்திற் கேற்ற வண்ணம் குமணன் கதையை நாடகமாக எழுதி நடிக்க.

4. ஒன்பான் சுவைகள் யாவை?

இலக்கணம்

உடன்பாடு, எதிர்மறை :

வள்ளி மலர் பறித்தாள்

வள்ளி மலர் பறித்திலள்

பறித்தாள்—உடன்பாட்டு வினை.

பறித்திலள்—எதிர்மறை வினை.

காரியம் நடை பெறுவதைக் குறிப்பது உடன்பாட்டு வினை.

காரியம் நடை பெருததைக் குறிப்பது எதிர்மறை வினை.

தன்வினை, பிறவினை :

முருகன் உண்டான். } தன்வினை
ஆசிரியர் எழுதினர். }

தானே செய்கிற வினை தன்வினை எனப்படும்.

முருகன் வேலனை உண்பித்தான்.
ஆசிரியர் மாணவரை எழுதுவித்தார். } பிறவினை

பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை பிறவினை எனப்படும்.

குறிப்பு : வி, பி என்னும் எழுத்துக்கள் தன்வினையைப் பிறவினை ஆக்கும்.

பயிற்சி

1. எதிர்மறை வினைகளாக்கி எழுதுக:-

கண்ணன் நின்றான்.
கமலம் ஆடினாள்.
பறவை பறந்தது.
மாணவர் படித்தனர்.
படம் உடைந்தது.

2. உடன்பாட்டு வினைகளாக்கி எழுதுக:-

வள்ளி வரவில்லை.
அவள் செய்கின்றிலள்.
அவை இவற்றைத் தின்னா.
பணம் இல்லை.
சோறு உண்ணாய்.

3. தன்வினைகளாக்கி எழுதுக:-

அவர் பிள்ளையை உண்பித்தார்.
சேரன் கோவிலைக் கட்டுவித்தான்
கண்ணன் நாற்காலியைச் செய்வித்தான்.
சடையர் கம்பரைப் படிப்பித்தார்.

4. பிறவினைகளாக்கி எழுதுக :

மாணவர் படித்தனர்.
குழந்தை நடக்கிறது.
சேவகன் தூங்குகிறான்.
அவன் உணர்வான்.
யாவரும் மதிப்பர்.

11. இயேசுநாதர் அறிவுரை

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் உலகில் தோன்றிய பெரியார் இயேசுநாதர். அவர் பிறந்த நாடு யூதேயா நாடு. ஒப்பற்ற அன்னை கன்னி மரியாள் மணிவயிறு வாய்த்த தவத்தால் அவர் அவதரித்தார். சூசை என்னும் தவசி அவரை வளர்த்துக் காத்து வந்தார்.

இயேசுநாதருக்குப் பன்னிரண்டு வயதான பொழுதே அவர் அறிவும் ஆற்றலும் பெற்று விளங்கினார். ஒருமுறை அவர் தம்முடன் வந்த பெற்றோர்களையும் மறந்து கோவிலில் இருந்த வேத சாத்திரிகளிடம் பலவற்றைப் பற்றி வினவிய வண்ணமிருந்தார். அதனைக் கண்ட பெற்றோர் வியப்படைந்து அவரை அழைத்துச் சென்றனர்.

இயேசுநாதருக்கு முப்பது வயதாயிற்று. அவர் தம் உள்ளத்தே தோன்றிய உண்மைகளை யாவருக்கும் எடுத்துரைக்கலாயினர். பலர் அவர் பின்னே செல்லுமிடங்களுக் கெல்லாம் செல்லலாயினர். அவர் செல்வாக்கு மிக உயர்ந்தது. அவரைக் கடவுளின் திருக்குமாரர் என யாவரும் போற்றலாயினர். அவர் பிணியுற்றவர்களிடத்துக் கருணை பூண்டு அவர்களுக்குப் பலவகைகளில் ஆறுதல் அளித்தார்.

ஒரு நாள் அவர் பின்னால் ஏராளமான மக்கள் சென்றார்கள். அவர் அருகிலிருந்த மலைமீது ஏறினார்; அங்கு யாவருங் காண நின்றார். அவருடைய அணுகிய சீடர்கள் அவருக்கருகில் நின்றனர். அவர்

தம் சீடர்களுக்குக் கூறுவதுபோல உலகினருக்குப் பின்வரும் அறிவுரை கூறலாயினர்:-

1. எளிமை வாழ்வு வாழ்பவன் விண்ணுலக வாழ்வு பெறுவான். இடர் உற்றோருக்கு இறைவன் ஆறுதல் அளிப்பான். பொறுமையாக இருப்போர் பூவுலகவாழ்வைப் பெறுவர். அறத்தின் வழி நடப்போர் மனவமைதி பெற்று மகிழ்வர். பிறரிடம் அருளுடையவர் கடவுளருளைப் பெற்று உய்வர். தூய உள்ள

மலைமீது இயேசுநாதர் சொற்பொழிவு

முடையவர் இறைவனைக் காண்பர். அமைதிக்கு உழைக்கும் மக்கள் ஆண்டவனது மக்களாகக் கருதப்படுவர். அல்லலுற்றும் அறத்தை நிலை நாட்டுபவர் வீடு பேற்றை அடைவர்.

2. வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியன ஒரு சில. மக்கள் கொடுக்கும் கொடை ஆரவாரத்திற்கென இருத்தலாகாது. அது மறைபொருளாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அது பயனற்ற

தாகி ஒழியும். பிறரறியக் கொடுத்த கொடை அப் பொழுதே புகழப்படுகின்றது; அதனுல் உடனே அதன் பயனை அது அடைந்து விடுகிறது. ஆகை யால் 'வலக்கை செய்யும் காரியம் இடக்கைக்குத் தெரியலாகாது'. இத்தகைய கொடையையே கடவுள் காண்கிருர். அவர் செய்வனவற்றை யாவரும் அறி யச் செய்கிருர்.

3. கடவுளைத் துதிப்பவன் யாவரும் காணும் வண்ணம் பொது இடங்களில் துதித்தல் கூடாது. அங்ஙனம் செய்பவர் உளம் பொருந்தத் துதிப்பவர் கள் ஆகார். அது பயனிலா வணக்கம் ஆகும். கடவுளின் துதி பிறருக்குத் தெரியாத மறைவிடத்தில் செய்யப்பட வேண்டும். அங்ஙனம் செய்யப்படும் துதியையே கடவுள் விரும்பித் தாம் அளிப்பன வற்றை யாவரும் அறிய நல்குவார்; துதிக்கும்போது பலவற்றைச் சொல்லித் துதித்தல் வேண்டாம்; அள வற்ற நீண்ட சொற்கள் நிரம்பிய துதி ஆண்டவனைக் கவராது. அவர் நமக்குத் தேவையானவற்றை அறிவார்; அதனை அருளத் தயங்கார்.

பின்னர் இயேசுநாதர் இறைவனை வணங்கித் துதிக்கும் சொற்களை யாவரும் அறிய எடுத்துரைத் தார். அங்ஙனம் கூறிய வணக்கவுரை இன்றும் கிறித்துவர்களால் இயம்பப்பட்டு வருகின்றது. அவ் வுரை சுருக்கமாகவும் எளிதாகவும் இருக்கிறது; இறைவன் இயல்புகளை நன்கு எடுத்துரைக் கின்றது.

இயேசுநாதர் இங்ஙனம் மறை உரைகளை மக்க ளுக்குச் சென்ற இடங்களிலெல்லாம் போதித்து வந்தார்; எளியவர், நோயுற்ருேர், குருடர் ஆகி

யோரைக் குணப்படுத்தினர். இதனல் அவர் மேல் அழுக்காறு கொண்டவர்கள் மேலும் பொருமை கொள்ளலானுர்கள். அவர்கள் யாவரும் ஒன்று கூடி இயேசுநாதர் மீது பல்வகைக் குற்றங்களைச் சாட்டினர்.

பொருமைக்காரர் சூழ்ச்சி பலித்தது. அவர்கள் இயேசுவைப் பலபட நிந்தித்தனர். அவர் உடலுக்கு அவர்கள் இயற்றிய துன்பம் அளவிட்டுச் சொல்லு வதற்கரிது. இறுதியில் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். மறுநாள் அதிகாலையில் அவர் உடலைப் பட்டுத் துணியால் மூடி அடக்கம் செய்தனர்.

அடக்கம் செய்த பின் மூன்று நாட்கள் கழித்து இயேசுநாதர் உயிர்பெற்றெழுந்தனர். யாவரும் வியப்புற்றனர். அவர் கடவுளின் திருக்குமாரரே எனப் பலரும் நம்பி வணங்கினர். அவர் யாவருக் கும் ஆசியளித்து அறிவுரை கூறினர். கடைசியாக அவர் தம் சீடரையழைத்து, தாம் அதுகாறும் அவர் களுக்குக் கூறிவந்தனவற்றை உலகமெங்கும் பரப்ப வேண்டுமென்று கட்டளையிட்டார். சீடர்கள் வாழை யடி வாழையாக வளர்ந்து, இயேசு நாதரின் இன் னுரைகளை எல்லாவிடங்களிலும் இன்றும் பரப்பி வருகின்றனர்.

இயேசுநாதரின் சீடர்கள் தந்நலமற்று மக்கட் குத் தொண்டு செய்வதை அறியார் யார்?

அருஞ்சொற்கள்

ஒப்பற்ற	வியப்பு	அமர்ந்தார்	மனவமைதி
மணிவயிறு	செல்வாக்கு	அணுகிய	வீடுபேறு
தவசி	பிணியுற்ற	எளிமை	ஆரவாரம்
வினவிய	ஆறுதல்	விண்ணுலகு	மறைபொருள்

வினாக்கள்

1. இயேசுநாதர் இளமையைப் பற்றி வரைக.

2. இயேசுநாதர் செல்வாக்கு எப்படி அதிகமாயிற்று?

3. இயேசுநாதரின் அறிவுரைகளைக் கூறுக.

4. வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியன எவை யென்று இயேசுநாதர் கூறினர்?

5. கடவுளை எங்ஙனம் துதித்தல் வேண்டுமென்று இயேசுநாதர் கூறினர்?

6. இயேசுநாதர்மீது ஏன் குற்றம் சாட்டினர்?

7. இயேசுநாதர் இறந்த பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சி யாது?

பயிற்சி

1. இங்குக் கூறப்பட்டவை விவிலியநூலில் இருந்து எழுதப்பட்டவை. இவற்றை அந்நூலில் கண்டு படிக்க.

2. 'இயேசுநாதரின் மலைச் சொற்பொழிவுகள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

3. பிறந்தார், அவதரித்தார்—வேறுபாடு அறிந்து கொள்க. இவை போன்ற சொற்களைக் காண்க.

இலக்கணம்

செய்வினை, செயப்பாட்டுவினை:

செங்குட்டுவன் கனகவிசயரை வென்றான்.

வென்றான்- செங்குட்டுவன் செய்தவினை. ஆதலால் இது செய்வினை எனப்படும்.

கனகவிசயர் செங்குட்டுவனால் **வெல்லப்பட்டனர்.** இவ்வாறு 'படு' என்னும் துணைவினை பெற்று வருவது **செயப்பாட்டு வினை.**

செய்வினை வாக்கியத்தில் எழுவாயாக இருந்த **செங்குட்டுவன்** என்னும் சொல், செயப்பாட்டுவினை வாக்கியத்தில் **செங்குட்டுவனால்** என மூன்றும் வேற்றுமை உருபு ஏற்று இருப்பதைக் காண்க.

பயிற்சி

(1). செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாகவும், செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாகவும் மாற்றுக:

1. வள்ளி கோலம் போட்டாள்.
2. ஆசிரியரால் பாடம் கற்பிக்கப்பட்டது.
3. மாடு புல் மேய்ந்தது.
4. அரசன் நாட்டை ஆண்டான்.
5. மலர்கள் காற்றால் வீழ்த்தப்பட்டன.
6. நாய் திருடனைக் கடித்தது.
7. முருகன் பந்தை அடித்தான்.

(2). இப்பாடத்தில் உள்ள செயப்பாட்டு வினைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

12. காளமேகப் புலவர்

கும்பகோணத்திற்கு அருகில் நந்திக் கிராமம் என்னும் சிற்றூர் ஒன்று உள்ளது. அவ்வூரில் வைணவ வேதியர் குலத்தில் காளமேகப் புலவர் பிறந்தார். இவருக்குப் பெற்ருேர் இட்ட பெயர் வரதன் என்பது. இளமையில் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெருமையால் இவர் அட்டில் தொழில் பயின்று, திருவரங்கம் சென்று சமையல் தொழிலே மேற்கொண்டார்.

இவர் திருவானேக்காவினேச் சேர்ந்த மோகனங்கி என்பவளே மனேவியாகக் கொண்டு திருவரங்கத்தை விட்டுத் திருவானேக்கா வந்து கோவில் மடைத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். பின்னர் இவர் புலமை பெற்று, முதன் முதலில் 'திருவானேக்கா உலா' என்னும் நூலேப் பாடினுர். இவர் விரைந்து கவிபாடுவதில் வல்லமை பெற்றபடியால் செந்தமிழ் நாடு முழுவதும் சுற்றித் திரியலாயினர்; எண்ணிறந்த கவிகளே இயற்றலாயினர். இவரது புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. இசை, வசை ஆகிய இருவகைத் தன்மைகளே இவர் பாடல்கள் பெற்றிருப் பினும் இவரை 'வசைபாடக் காளமேகம்' என்றே யாவரும் கூறி வந்தனர். இவருடைய பாக்கள் நயம் மிக்கவை.

காளமேகப்புலவர் புகழ் பெற்று வருங்காலேயில், திருமலேராயன் பட்டினம் என்னும் ஊரைத் திருமலே ராயன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் அவையில் அதிமதுரக்கவி என்னும் புலவன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் கீழ்ப் புலவர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் யாவரும் செருக்கே உரு

வானவர்கள். தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற அகந்தை அவர்களிடம் இருந்தது. அவர்கள் பிற புலவர்களை இகழ்ந்த வண்ணம் இருந்தனர். அரசனும் அவர்கள் பக்கமே சார்ந்து இருந்தான். இச்செய்தியை யறிந்த காளமேகம் திருமலைராயன் பட்டினம் சென்றார்.

காளமேகப் புலவர் அவ்வூரினுள் நுழைந்த காலை அதிமதுரக்கவி மிகவும் ஆரவாரத்துடன் அரசவைக்குச் சென்று கொண்டிருந்தான். புலவர் அவனை உற்று நோக்க, அக்கூட்டத்தில் சென்ற கட்டியங்கூறுவோன், 'அதிமதுரக் கவிராய சிங்கம் பராக்' என்று காளமேகப் புலவரிடம்கூறினான். 'இவ னிடம் அப்படி என்ன இருக்கிறது? மருந்து வகை யில் ஒன்றான அதிமதுரத்தைப் பாடினாலும் பயன் உண்டு' என்னும் பொருள்படக் காளமேகம் ஒரு பாடலைப் பாடினார். இதைக் கேட்ட அதிமதுரக்கவி வெகுண்டு அவரைத் தண்டிக்கும் எண்ணத்துடன் அரசவை சென்றான். அவைக்குச் சென்றதும் தன் ஆளையனுப்பிக் காளமேகம் தங்கி இருக்கும் கடைக் குச் சென்று அரையணாவிற்கு மேகம் பசு இரத்தினம் வாங்கிவரக் கூறி அனுப்பினான். அந்த ஆள் காள மேகம் நின்றிருந்த கடையில் வந்து அதிமதுரக்கவி கூறியது போலக் கேட்க, கடைக்காரன் ஒன்றும் தெரியாமல் விழித்தான். அதைக் கேட்ட காள மேகப் புலவர் 'காராமணி' (கார் + ஆ + மணி) கொடுத்தனுப்பச் சொன்னார். அவனும் அதைப் பெற்றுச் சென்று அதிமதுரக் கவியிடம் அளித்தான்.

அதிமதுரக்கவி காளமேகத்தின் புலமையை ஒருவாறு உணர்ந்து அவன் யார் என்பதை அறிந்து

வர ஓராளை அனுப்பினான். அவன் காளமேகத திடம் சென்று உசாவ, அவர் ஒரு சீட்டுக்கவியில் தம் புகழை விளக்கி எழுதி அனுப்பினார். அதிமது ரக்கவி இதனை அரசனிடம் அறிவித்தான். அரசன் அவரை அழைத்து வர ஆள் போக்கினான்; அவைக் குக் காளமேகம் வரின் அவருக்கு யாரும் இருக்கை அளிக்கக்கூடாது என்றும் திட்டப்படுத்தி இருந் தான்.

அரசன் கட்டளையை மதித்து, காளமேகம் அர சவை சென்றார். அரசன் முதல் யாவரும் வாளா விருந்தமையைக்கண்டு அதிமதுரக்கவியின் சூழ்ச்சி யைப் புலவர் தெரிந்து கொண்டார். அவர் அரச னுக்கு ஆசி கூறித் தம்மிடமிருந்த ஓர் எலுமிச்சம் பழத்தை அரசன் கையில் கொடுத்தார். அதனைப் பெற்ற மன்னன் ஏதும் பேசவில்லை; இருக்க இட மும் அளிக்கவில்லை. காளமேகம் அகிலாண்டேசுவரி மீது முப்பது பாடல்கள் பாடினார். மன்னன் அரி யணை நீண்டு கவிஞன் இருக்க இடம் கொடுத்தது.

அதனைக் கண்ட யாவரும் வியப்புற்றனர். அவையிலிருந்த கவிகள் அனைவரும் அவரையே விடாது நோக்கினர். காளமேகம் அவைப் புலவர் களை நோக்கி, 'நீவிர் யாவர்?' என்று கேட்டார். 'நாம் கவிராயர்கள்' என்றனர் அவர்கள். அது கேட்டுக் காளமேகப் புலவர் நகைத்து அவர்களை நோக்கி,

> "வாலெங்கே நீண்டெழுந்த வல்லுகிரெங் கேநாலு
> காலெங்கே ? யூன்வடிந்த கண்ணெங்கே?—சாலப்
> புவிராயர் போற்றும் புலவீர்காள் ! நீங்கள்
> கவிராயர் என்றிருந்தக் கால்.

என்று ஒரு வெண்பாவைப் பாடினார்.

தங்களைக் 'குரங்கு' என்னும் பொருளில் வைத்துப் பாடியதைக் கண்ட புலவர்கள் சீற்ற முற்றனர்; காளமேகப் புலவரை இழிவுபடுத்தித் துரத்த எண்ணினர்.

உடனே அதிமதுரக்கவி காளமேகத்தை நோக்கி, 'அரிகண்டம் பாடுவாயா?' என்று கேட்டான். 'அது எப்படி?' என்றார் காளமேகம். "பாடும் புலவன் கழுத்தில் கத்தி கட்டிக்கொள்ள வேண்டும்; மற்றவர்கள் கருத்துப்படி பாட வேண்டும். இல்லையேல் கத்தியால் வெட்டுண்டு இறக்க வேண்டும். இதுவே அரிகண்டம்" என்றான் அதிமதுரக்கவி.

உடனே காளமேகப் புலவர், 'இது எளிது. உமக்கு 'எமகண்டம்' பாட வருமா?' என்றார். 'எமகண்டம் என்றால் என்ன?' என்றான் அதிமதுரம். உடனே புலவர், "பதினாறடி நீளம் பதினாறடி அகலம் பதினாறடி ஆழம் உள்ள குழி வெட்ட வேண்டும். நான்கு மூலைகளிலும் பதினாறடி இரும்புத் தூண்களை நிறுத்த வேண்டும். கம்பத்தின் மேல் நான்கு சட்டங்களும் இடையில் ஒரு சட்டமும் இருக்கவேண்டும். நடுச் சட்டத்தில் ஓர் உறி கட்ட வேண்டும். குழிக்குள் கட்டையிட்டு நெருப்பு மூட்ட வேண்டும். நெருப்புமேல் ஓராள் உயரமுள்ள இரும்புக் கொப்பரையில் எண்ணெயிட்டுக் கொதிக்கச் செய்ய வேண்டும். கம்பத்திற் கொன்றாக நான்கு மதயானைகளைக் கட்ட வேண்டும். யானைகளின் துதிக்கைகளில் இணைக்கப்பட்ட சங்கிலியில் கோத்து எட்டுக் கத்திகளைக் கழுத்தில் நான்கும் அரையில் நான்குமாகக் கட்டிக் கொள்ள வேண்

டும். கொப்பரைக்கு மேலுள்ள உறியில் ஏறி உட்கார்ந்து கொள்ள வேண்டும். யார் யார் எப்படி எப்படிப் பாடச் சொல்லுகிறார்களோ அப்படிப் பாட வேண்டும். பாடாவிட்டால் குறிப்புக் கொடுத்தவர்கள் யானைப் பாகர்களுக்குக் குறிப்புச்செய்வர். அவர்கள் யானையைத் தோட்டியால் குத்துவர். யானை துதிக்கைகளில் கட்டிய சங்கிலிகளை இழுக்கும். உறியில் இருக்கும் புலவர் இரு துண்டங்களாக வெட்டப்பட்டு எண்ணெய்க் கொப்பரையில் விழுவர். 'எமகண்டம்' இதுவே'' என்றார்.

அதிமதுரக்கவி இதைக் கேட்டு நடுநடுங்கினான்; காளமேகத்தை இந்த எமகண்டத்தில் சிக்க வைத்துக் கொல்லத் தீர்மானித்தான். உடனே அவரை நோக்கி, "நீர் இங்ஙனம் செய்ய இயலுமோ?'' என்றான். அவர், "இது அகந்தை மிக்க புலவர்களுக்கேயன்றி எனக்கன்று'' என்றார். "ஆயினும் செய்து காட்டுவேன்'' என்று கூறி, எமகண்டத்திற்குச் சித்தப்படுத்தச் செய்தார்.

காளமேகத்தை உறியிலேற்றிப் புலவர்கள் யாவரும் தத்தம் விருப்பம்போல் பாடக் கேட்டனர். காளமேகம் இறைவியினருளால் எமகண்டத்தில் வெற்றி பெற்றார். அதனைக் கண்டவர் யாவரும் வியப்புக் கடலில் ஆழ்ந்து புலவரை வாயார வாழ்த்தினர். ஆனால், அதிமதுரக்கவியைச் சேர்ந்த கவிஞர்களும் மன்னனும் வாளா விருந்தனர். இதைக் கண்ட காளமேகம் கடுஞ்சினம் கொண்டு இரண்டு பாடல்களைப் பாடினார். அதனால் திருமலைராயன்பட்டினம் மண் மாரியால் அழிந்தது.

பின் காளமேகப் புலவர் பற்பல இடங்களுக்குச் சென்றார்; பாடல்கள் பலவற்றைப் பாடினார்.

அருஞ்சொற்கள்

அட்டில்	இறைவி	கடல்மடை	அவை
வைணவன்	நல்வினை	இசை	செருக்கு
சமையல்	வெருட்ட	வசை	ஒப்பார்
மடைத்தொழில்	சுவைத்து	நயம்	மிக்கார்

வினாக்கள்

1. காளமேகத்தின் இளமை—குறிப்பு வரைக.
2. காளமேகம் முதலிற் பாடிய நூல் யாது? அவர் வல்லமையைக் கூறுக.
3. திருமலைராயன்பட்டினத்துப் புலவர்கள் இயல்பைக் கூறுக.
4. அதிமதுரக்கவி காளமேகத்தை எங்ஙனம் சோதித்தான்?
5. அரசவையில் காளமேகம் இருக்கை பெற்றது எங்ஙனம்?
6. 'நாங்கள் கவிராயர்' என்றபோது காளமேகம் கூறியது யாது?
7. 'அரிகண்டம்' என்றால் என்ன? இதனைக் கூறியது யார்?
8. 'எமகண்டம்' என்றால் என்ன?
9. 'நீர் இங்ஙனம் செய்ய இயலுமா?'-யார் கூறியது? எப்போது கூறியது? யாரிடம் கூறியது?
10. திருமலைராயன்பட்டினம் மண்மாரியால் அழிந்ததேன்?

பயிற்சி

1. காளமேகப் புலவர் பாடல்களைப் படித்துப் பார்க்கவும்.
2. காளமேகப் புலவரைப் பற்றிய கதைகள் பல இருக்கின்றன. ஆசிரியரைக் கேட்டறிக.

3. எதிர்ப்பதங்கள் எழுதுக : பெருமை, நல்வினை, நிறைந்த, கல்லாமலே.

4. சேர்த்து எழுதுக :—திரு + ஆனைக்கா, கடுமை + தவம், அரசன் + அவை.

இலக்கணம்

செயப்படுபொருள் குன்றுவினை, குன்றியவினை :

வள்ளி மலரைப் பறித்தாள் — பறித்தாள் என்பது இவ் வாக்கியத்தின் பயனிலை. இதன் செயப்படுபொருள் 'மலர்' என்பது. இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் உள்ளது. எனவே, இவ்வாக்கியத்தில் உள்ள வினைமுற்று செயப்படுபொருள் குன்று வினையானதைக் காண்க.

ஒரு குழந்தை பிறந்தது—இவ்வாக்கியத்தின் பயனிலை பிறந்தது என்பதாகும். இதனில் செயப்படுபொருள் இல்லை. எனவே, இந்த வினை செயப்படுபொருள் குன்றிய வினையாகும்.

ஏவல் - வியங்கோள் :

அளவறிந்து உண்.
அளவறிந்து உண்க.

உண்—இது ஏவல் வினை. உண்க - வியங்கோள் வினை.

ஏவல் முன்னிலை இடத்தில் மட்டும் வரும். வியங்கோள் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

பயிற்சி

1. உன் பாடத்திலிருந்து செயப்படுபொருள் குன்றிய வினைக்கும், குன்று வினைக்கும் உதாரணங்கள் எடுத்து எழுதுக.

2. உங்கள் பாடத்தில் ஏவல்-வியங்கோள் வினைகளைக் கண்டறிக.

3. ஏவலாகவும்-வியங்கோளாகவும் ஆக்குக :

கொண்டான்	நெய்தார்
தோண்டினர்	கொன்றன்
இருக்கின்றார்	போனது

4. பின்வரும் பகுதிகளைக்கொண்டு நீங்கள் கற்ற பல வகை வினைமுற்றுகளையும் உண்டாக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

உரி, கொடு, தின், உமிழ், விடு, எடு.

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

சிவ பெருமான்

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும் 1
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெல்லாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே.

—திருநாவுக்கரசர்

திருமால்

பச்சைமா மலைபோல் மேனி 2
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே !
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்

இயேசுநாதர்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட 3
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம்.

—கிருட்டிண பிள்ளை

முகம்மது நபி

அரபிய நாட்டில் தோன்றி 4
ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த
மகம்மது நபியே போற்றி !
தரையினில் பொதுமை மல்கிச்
சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த
கருணையே போற்றி ! போற்றி !

—திரு. வி. க.

தமிழ் மொழி

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே 5
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே

வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகண்ணா வயங்குநன் மொழியே
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

—கா. நமச்சிவாய முதலியார்

குறிப்புரை

திருநாவுக்கரசர்: சைவசமய குரவர் நால்வரில் இவர் ஒருவர். இவருடைய இயற்பெயர் மருள் நீக்கியார். ஊர் - திருவாமூர். பெற்றோர் - புகழனுர்-மாதினியார். தமக்கை-திலகவதி. இவர் கி. பி. 7-ஆம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவர். இறைவனுல் நாவுக்கரசர் என்னும் பெயர் அளிக்கப்பட்டதென்பர். வேறு பெயர்கள்: அப்பர், வாகீசர்.

அருஞ்சொற் பொருள் : வெஞ்சொல் = கொடுஞ்சொல் (வெம்மை + சொல் = வெஞ்சொல்). வைகலும் - நாள் தோறும். நைஞ்சு = நைந்து, இளகி. வீடுற - வீடு + உற = வானுலகு பெற. அஞ்சல் = பயப்படாதே.

தொண்டரடிப்பொடியாழ்வார் : பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். (பேயாழ்வார், பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார், திருப்பாணுழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், சூடிக்கொடுத்த நாச்சியார், நம்மாழ்வார் என்போர் மற்றைப் பதினெரு ஆழ்வார்களாவர்.) பிறந்த ஊர்: திருமணங்குடி. காலம் : 9-ஆம் நூற்ருண்டு. இவருடைய மற்ருெரு பெயர் : விப்பிரநாராயணர்.

அருஞ்சொற் பொருள் : கமலம் = தாமரை. அச்சுதா = குற்றமற்றவனே; அமரர் = தேவர். கொழுந்து = குல முதல்வன். ஏறு = ஆண் சிங்கத்தை ஒத்தவர். ஆயர் = இடையர். அரங்கமாநகர் = திருவரங்கம்.

கிருட்டிண பிள்ளை : இவர் பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர்; கிறித்தவர். திருநெல்வேலி C. M. கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராயிருந்தவர். காலம் : 1827-1900. இவர் எழுதிய இரட்சண்ய யாத்ரிகம் 47 படலங்களும் 4000 பாடல்களுமுடையது. இவர் இரட்சண்ய மனோகரம், இரட்சண்ய குறள் எனும் கிறித்துச் சமயச் சார்பான நூல்களையும் எழுதியுள்ளார்.

அருஞ்சொற்பொருள் : ஓங்கிட = உயர்நிலையடைய. ஞானம் = அறிவு. நனி = மிக. ஊனம் = குற்றம். தீனரட்சகன் = ஏழைகளைக் காப்பவன். சிந்தித்து = எண்ணி.

திரு. வி. க:—இவர் பிறந்த ஊர்—துள்ளம். காலம்—1883-1953. பெற்ருேர்—விருத்தாசல முதலியார்—சின்னம்மையார். இவர் உரைநடை நூல்கள், கவிதைகள் எனப் பல நூல்களை இயற்றியுள்ளார். சொல்லிலும் எழுத்திலும் இவர் வல்லவர். இலக்கிய உலகில் புகழ் பெற்றிருந்தது போன்று அரசியல் உலகிலும், தொழிலாளர் உலகிலும் இவர் பெருஞ் சிறப்படைந்திருந்தார்.

அருஞ்சொற் பொருள் : மரபு = முறை. மல்கி = நிறைந்து. நேயம் = நட்பு. கரவு = வஞ்சனை. மறை = வேதம், குர்ஆன்.

கா. நமச்சிவாய முதலியார் : பள்ளி மாணவர்க்குரிய தமிழ் நூல்களை அழகிய முறையில் வெளிப்படுத்திய முதல்வர் இவரே எனலாம். காலம் : 1876—1937. இவர் தொல்காப்பியம் போன்ற சில பழைய நூல்களை அச்சிட்டு வெளிவரச் செய்தார். இவர் அரசாங்கத்தில் தமிழ்த்துறைத் தலைவராயிருந்தார்.

அருஞ்சொற் பொருள் : தெற்கு + மொழி = தென்மொழி = தமிழ். ஒளிர்வுறும் = விளங்கும். வான் = ஆகாயம். மாந்தர் = மக்கள். வயங்கு = விளங்கும். இயல் = இயற்கை.

கேள்விகள்

1. ஆனைக்கா அண்ணல் எவர்க்கு அஞ்சலென்று அருள்புரிவான் ?

2. அரங்கப் பெருமானை நோக்கி ஆழ்வார் கூறுவன யாவை ?

3. தீனரட்சகன் தோன்றியதனுல் நேர்ந்தவை யாவை ?

4. முகம்மது நபியைத் திரு.வி.க. வாழ்த்துவதெப்படி?

5. தமிழின் பெருமைகளை நமச்சிவாய முதலியார் எவ்வாறு கூறுகிருர் ?

II. இயற்கை

1. இராக் காலம்

ஞாயிறு மறைந்தது நண்ணுபேர் அமைதிய
மாயிரு ஞாலமேல் மதியொளி பொழிந்தது
மின்னின விண்மீன் துன்னின நள்ளிருள்
மன்னின மனைதொறும் மாவொளி விளக்கம்
குவிந்தன தாமரை அவிழ்ந்தன குமுதம்
மல்லிகை முல்லை மலர்ந்து கமழ்ந்தன
கூகை குழறின கூத்தொலி கேட்டன
கோகம் ஒடுங்கின குலவின சகோரம்
வேலை செய்குநர் ஏலவலி பெற்றனர்
களவு விரும்புநர் அளவில்களி எய்தினர்
ஏழையெம் போலியர் இன்ப முற்றனர்
இறுதிக் காலத் துறுதி காட்டுவோய் !
வாழிய இரவே ! வாழிய
ஊழி ஊழிஇவ் உலகில் மேவியே.

—பரிதிமாற் கலைஞன்

2. இளவேனில்

செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தார் அசோகம் மடலவிழக் - கொந்தார்
இளவேனில் வந்ததால் என்னுங்கொல் இன்று
வளவேல்நற் கண்ணி மனம்.

—இளங்கோவடிகள்

1. **இராக்காலம்:**-இதன் ஆசிரியர் பரிதிமாற் கலைஞன். இது சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பெயரின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரி

யில் தமிழாசிரியராக இருந்தவர்; தமிழ் மொழி நன்கு பயின்றவர்; உரைநடை நூல்கள், நாடக நூல்கள், தமிழ்மொழி வரலாறு ஆகியவற்றை இயற்றியவர். இப்பகுதி அவரது தனிப் பாசுரத் தொகை என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

குறிப்புரை

ஞாயிறு - சூரியன். நண்ணு-வரும். அமைதிய-சத்தமின்மை. மாஇரு-மிகப் பெரிய. மதி-சந்திரன். விண்மீன்-நட்சத்திரம். துன்னின-வந்தன. மன்னின - நிலை பெற்றன. குவிந்தன - மூடின. அவிழ்ந்தன - மலர்ந்தன. கமழ்ந்தன - வாசனை வீசின. கூகை-கோட்டான். கோகம்-சக்கரவாளம் என்னும் பறவை. சகோரம் - ஒருவகைப் பறவை. ஏலவலி-மிக்க வலிமை. விரும்புநர்-விரும்பியோர். அளவு இல் களி-மிக்க மகிழ்ச்சி. எய்தினர் - பெற்றனர். எம்போலியர் - எம்மைப் போன்றவர். இறுதி - முடிவு. உறுதி - நன்மை. ஊழி ஊழி - நெடுங்காலம். மேவி-பொருந்தி.

2. **இளவேனில்:**—இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனின் தம்பி யாவார்; இவர் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர். சிலப்பதிகாரம் வேனிற் காதையில் உள்ள பா இது. இவர் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு.

விரிய - மலர. தேமா - இனிய மாமரம். ஒழுக - அழகுடன் தளிர்க்க. மைந்து ஆர்-அழகு பொருந்திய. கொந்து ஆர் - கொத்துக்கள் நிறைந்த, இளவேனில்-இளவேனிற் காலம் - சித்திரை, வைகாசி மாதங்கள். வளவேல் - கூர்மையான வேல் போலும். ஆல் - அசை.

III. அறவுரை

1. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 1

அறன் வலியுறுத்தல்

அறத்தான் வருவதே இன்பமற்று எல்லாம்
புறத்த புகழும் இல. 2

மக்கட்பேறு

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 3

அன்புடைமை

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 4

விருந்தோம்பல்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 5

இனியவை கூறல்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 6

செய்ந்நன்றி அறிதல்

காலத்தி னல்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 7

நடுவு நிலைமை

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். 8

அடக்கமுடைமை

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 9

ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 10

பொறையுடைமை

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 11

அழுக்காறாமை

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 12

வெஃகாமை

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு. 13

புறங்கூறாமை

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 14

தீவினையச்சம்

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 15

ஒப்புரவறிதல்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின். 16

ஈகை

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 17

புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 18

கள்ளாமை

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 19

வாய்மை

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 20

வெகுளாமை

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும். 21

இன்னா செய்யாமை

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 22

இறைமாட்சி

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. 23

கல்வி

கண்ணுடையர் என்பவர் கற்ரோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 24

கல்லாமை

அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 25

கேள்வி

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 26

அறிவுடைமை

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 27

குற்றங்கடிதல்

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு. 28

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை. 29

வலியறிதல்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 30

காலமறிதல்

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 31

இடனறிதல்

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 32

தெரிந்து தெளிதல்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 33

செங்கோன்மை

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். 34

ஊக்கமுடைமை

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 35

மடியின்மை

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 36

இடுக்கண் அழியாமை

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 37

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 38

மானம்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 39

உழவு

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 40

——திருவள்ளுவர்

குறிப்புரை

திருக்குறள் : அழகிய குறள் வெண்பாவால் ஆகிய நூல் என்பது இதன் பொருளாகும். "பொது மறை" எனப் பெரும்புகழ் எய்திய இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றுகும். இது அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளை உடையது. இந் நூல் 1330 குறட்பாக்களைக் கொண்டது. இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் 2000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்; நூலறிவும், உலகியல் அறிவும், மதி நுட்பமும் வாய்ந்தவர். இவரைப் பற்றிய உண்மையான வரலாறு அறியக் கூட வில்லை.

அருஞ்சொற்பொருள்

1. உவமை-ஒப்பு, கவலை-துன்பம், அரிது-முடியாது.

2. மற்று-பிற, புறத்த-துன்பந் தருவன.

3. ஈன்ற-பெற்ற, பெரிது-மிகவும், சான்ருேன்-கல்வி கேள்விகளால் நிறைந்தவன்.

4. வழியது - வழிப்பட்ட, உயிர் நிலை - உயிருள்ள உடம்பு, என்பு - எலும்புக் கூடு.

5. அகன் - மனம், அமர்ந்து - விரும்பி, செய்யாள் - இலக்குமி, முகன் - முகம், ஓம்புவான் - பேணுபவன்.

6. அணி - ஆபரணம், பிற - பொன்னுலும் மணியாலும் ஆனவை.

7. சிறிது - அளவிற்சிறிது, ஞாலம்-பூமி, மாண-மிக.

8. பிறவும் - பிறர் பொருளையும், தம போல் - தம் பொருள் போல், பேணி - மதித்து, வாணிகம் – நல்ல ஊதியம்.

9. பணிதல் - அடக்கமுடைமை, செல்வம் தகைத்து- செல்வம் போல் சிறப்புடையதாகும்.

10. குடிமை - உயர்குலம், இழுக்கம் – தவறுதல்.

11. ஒறுத்தார் - தண்டித்தவர், பொன்றும் - உலகம் அழியும்.

12. அழுக்காறு - பொறுமை, ஒரு - ஒப்பற்ற, திருச் செற்று - செல்வத்தைக் கெடுத்து, தீயுழி - நரகத்தில். உய்த்து - செலுத்தி.

13. அறன் - தருமம், வெஃகா - விரும்பாத, திரு - திருமகள், திறன் - வகை.

14. பக - நீங்குமாறு, நகச்சொல்லி - மகிழுமாறு கூறி, நட்பாடல் - சிநேகம் செய்தலை, தேற்ருதவர் - அறியாதவர்.

15. இலன் என்று - ஏழையென்று, பெயர்த்து - மீண்டும்.

16. நயனுடையான் - உபகாரம் செய்பவன், படின் - உண்டாகுமாளுல், உள்ளூர் - ஊர் நடுவே, பழுத்தற்று - பழுத்தல் போலாம்.

17. வன்கணவர் - கொடியர், ஈத்து - கொடுத்து, உவக்கும் - மகிழும்.

18. ஈதல் - கொடுக்க, இசைபட - புகழுண்டாக, வாழ்தல் - வாழ்க, ஊதியம் - பயன்.

19. உள்ளல் - நினைத்தல், கள்ளத்தால் - வஞ்சனை யால், கள்வேம் - கொள்வேம், எனல் - என்று எண்ணுதே.

20. எல்லா விளக்கும் - வெளி இருள் போக்கும் விளக்குகள், பொய்யா விளக்கு - பொய் கூருத உண்மை என்னும் விளக்கே.

21. வெகுளி – கோபம், தீய - துன்பம்.

22. இன்ன - துன்பந்தருவனவற்றை. தாமே - தாமாகவே.

23. அஞ்சாமை - வலிமை, ஈகை-கொடை, ஊக்கம் - முயற்சி, எஞ்சாமை - குறையாதிருப்பது, இயல்பு - முறை.

24. என்பவர்-என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர்.

25. கோட்டி கொளல் - சபையில் ஒன்றைச் சொல்லுதல், அரங்கு - விளையாடும் இடம், வட்டு - உண்டை (சூதாடு கருவி).

26. எனைத்தானும் - சிறிதாயினும், அனைத்தானும்-அவ்வளவு சிறிதாயினும், ஆன்ற - நிறைந்த.

27. ஆவது-வரக்கூடியவற்றை, அஃது-பின்வருவனவற்றை, அறிகல்லாதவர் - முன் அறியமாட்டாதவர்.

28. நீக்கி - போக்கி, காண்கிற்பின் - காணவல்லவனானால், இறை - அரசனுக்கு, என் - என்ன ?

29. தமரா - சுற்றமாகக் கொண்டு, ஒழுகுதல் - தாம் அவர் சொற்படி நடத்தல், வன்மை - வலிமை, தலை - சிறந்ததாகும்.

30. பீலி - மயிலிறகு, சாகாடு-வண்டி, சாலமிகுத்து - அதிகமாக, பெயின் - ஏற்றினால், இறும் - முறியும்.

31. கூம்பும்பருவம் - ஒடுங்கி இருக்க வேண்டிய காலம். கொக்கு ஒக்க - கொக்கைப் போல ஒடுங்கி இருக்க, சீர்த்த - செய்யும் காலம்.

32. நெடும் புனல் - ஆழமுடைய நீர், நீங்கின் - நீங்குமாயின், அடும் - வென்றுவிடும்.

33. கட்டளைக்கல் - உரைகல்லாவது, கருமம் - செய்யும் காரியங்கள்.

34. வென்றி - வெற்றி, கோல் - செங்கோல், கோடாது - வளையாது.

35. உள்ளம் - முயற்சி, உடைமை - செல்வம், நில்லாது - நிலைக்காது.

36. மடிமை - சோம்பல், குடிமை-உயர்குடி, தங்கின்-தங்குமானால், ஒன்னார் - பகைவர், புகுத்தி - உண்டாக்கி.

37. விழையான் - விரும்பாதான், இடும்பை - துன்பமடைதல். இயல்பு - இயற்கை, உறுதல் - அடைதல்.

38. அடுத்தது - அடுத்த பொருளினது தன்மையை, பளிங்கு - கண்ணடி, கடுத்தது - உள்ளத்தை.

39. நீப்பின் - நீங்கினலும். கவரிமா - கவரிமான், மானம்வரின் - மானம் கெடும் நிலைமை வந்தால்.

40. கை செய்து-கையால் உழுது, ஊண்-உண்ணும், மாலையவர் - தன்மையை உடைய உழவர், ஒன்று - ஒரு பொருளை, கரவாது - ஒளிக்காது, ஈவர் - கொடுப்பார்.

வினக்கள்

1. தனக்குவமை இல்லாதான் யார்? அவனை அடைந்தார் பெறும் பயன் யாது?

2. இன்பம் என்பது யாது? அது இல்லாதவை யாவை?

3. தாய் எப்போது மகிழ்வாள்? எப்படி மகிழ்வாள்?

4. அன்புடைமையைப் பற்றிய வள்ளுவர் கருத்து யாது?

5. நல்விருந்து ஓம்புவான் இல் எத்தகையது?

6. எது அணி? எவை அணியல்ல?

7. ஞாலத்தின் மாணப் பெரிது யாது?

8. நடுவு நிலைமையைப் பற்றிய வள்ளுவர் கருத்து யாது?

9. பணிதல் எவர்க்குச் சிறப்புடையதாகும்?

10. ஒழுக்கம், இழுக்கம் - வள்ளுவர் கருத்து யாது?

11. பொறுமை யுடையவர்க்கு எது கிடைக்கும்? எப்படி?

12. 'ஒரு பாவி' என்று வள்ளுவர் எதைக் குறிக்கிருர்? ஏன்?

13. செல்வம் எவரிடம் சென்று சேரும்?

14. புறங்கூறுபவர் இயல்பு யாது?

15. வறுமை எப்போது மிகும்?

16. பயன் மரத்திற்குச் சமமாகச் சொல்லப்பட்டது யாது?

17. ஈத்துவக்கும் இன்பம் அறியாதவர் எவர்?

18. உயிர்க்கு ஊதியம் யாது?

19. 'உள்ளுவதும் தீது'—எது ?

20. சான்ருேரது விளக்கு யாது ?

21. கோபம் கொள்ளக் கூடாது—ஏன் ?

22. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற கருத்துடைய குறளைக் கூறுக.

23. அரசனின் இயல்புகள் யாவை ?

24. கண்ணுடையவர் யார் ? புண்ணுடையவர் யார் ?

25. அரங்கு இன்றி வட்டாடுதல் எதற்குச் சமம் என்று வள்ளுவர் கூறுகின்ருர் ?

26. 'கேள்வி'யைப்பற்றி வள்ளுவர் கூறியது யாது ?

27. அறிவுடையார் யார் ? அறிவிலார் யார் ?

28. குற்றம் நீக்கும் முறை யாது ?

29. வன்மையுள் எல்லாம் தலையாயது யாது ?

30. வலியறிதலைப் பற்றி வள்ளுவர் கூறியது யாது ?

31. கொக்கு, அதன் குத்து—இவற்றின் உவமேயங்களை வரைக.

32. புனலில் வெல்லுவது யாது ? புனலைவிட்டு நீங்கின் எதனை எவை வெல்லும் ? இதனுல் அறிவது யாது ?

33. 'கட்டளைக்கல்' என்ருல் என்ன ? அது எதற்குப் பயன்படும் ? இதைக்கொண்டு நாம் அறிவது யாது ?

34. மன்னனுக்கு வெற்றி தருவது யாது ? தராதது யாது ?

35. நிலைக்கும் செல்வம் யாது ? நிலைக்காச் செல்வம் யாது ?

36. ஒன்ருர்க்கு அடிமை புகுத்துவது யாது ?

37. துன்பம் அடையாதவன் யார் ?

38. பளிங்கின் தன்மை யாது ? அதனைப் போன்றது யாது ?

39. 'கவரிமா'வைப் போன்றவர் யாவர் ?

40. உழவரது இயல்பு யாது ?

2. அறநெறிச்சாரம்

அறம்பத்து

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதம் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம். 1

அறத்தின் இன்றியமையாமை

மக்க ளுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறிவும் அறிவரிது—மக்கள்
அறிவ தறிந்தா ரறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகு வார். 2

தன்னலமற்ற அறமே தலையாய அறம்

பெற்றி கருமம் பிழையாமற் செய்குறின்
பற்றின்கண் நில்லா தறஞ்செய்க—மற்றது
பொன்றுப் புகழ்நிறுத்திப் போய்ப்பிறந்த ஊர்நாடிக்
கன்றுடைத் தாய்போல் வரும். 3

செயலாற்றுர்க்குச் செய்யுமறமே சிறப்பானதாகும்

அட்டுண்டு வாழ்வார்க் கதிதிகள் எஞ்ஞான்றும்
அட்டுண்ணு மாட்சி யுடையார்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வா ரதிதிகள் என்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை. 4

—முனைப்பாடியார்

குறிப்புரை

இதன் ஆசிரியர் முனைப்பாடியார். இவர் அருக சமயத்தவர். இந்நூல் 226 பாக்கள் கொண்டது. இது 500 ஆண்டுகட்கு முன் இயற்றப் பெற்ற பழம் பெரு நூல். இந்நூலில் உள்ள அறவுரைகள் பசுமரத் தாணியெனப் பதியும் தன்மையன.

அருஞ்சொற்பொருள்

1. பொறை - பொறுமை, மேன்மை - பெருமை, செம்மை-நடுநிலைமை, ஒன்றின்மை-தனக்கெனவொன்றைப் பெருது செயலாற்றல், துறவுடைமை-பற்றுவிடல், திறம்பா-மாறுபடாத, ஆன்ற-மேலான.

2. உடம்பு-பிறவி, அறிவு-ஆறறிவு, வழுவார்-நீங்கார், நெறிதலை-அறநெறியின் வழி, ஒழுகுவார்-நடப்பார்.

3. பெற்றி கருமம்-நற்குணமான செயல்கள், பிழையாமல் - தவருமல், பற்று - அவா, பொன்ரு - அழியாத, போய்ப் பிறந்த ஊர் நாடி-மறுமையில் நீ பிறந்த ஊரைத் தேடி.

4. அட்டு - சமைத்து, அதிதிகள் - விருந்தினர், எஞ்ஞான்றும்-எக்காலத்தும், மாட்சி-பெருமை, வீழ்வார்-மலையுச்சியினின்று வீழ்வார்.

விளுக்கள்

1. ஆன்ற குணமுடைய அறம் பத்து யாவை ?

2. அறத்தின் இன்றியமையாமை எங்ஙனம் கூறப்படுகிறது?

3. அறம் எங்ஙனம் செய்தல் வேண்டும் ?

4. அதிதிகள் எங்ஙனம் இருக்க வேண்டும் ?

5. வீழ்வார்க்கு வீழ்வார் துணை—யார் ? எப்படி ?

124196

3. இனியவை நாற்பது

ஏவது மாரு இளங்கிளைமை முன்இனிதே 1
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே
ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே
தேரிற்கோள் நட்புத் திசைக்கு.

மான மழிந்தபின் வாழாமை முன்இனிதே 2
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது.

நட்டார்ப் புறங்கூருன் வாழ்தல் நனிஇனிதே 3
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்இனிதே
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதல் இனிது.

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே 4
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது.

—பூதஞ்சேந்தனுர்

குறிப்புரை

ஆசிரியர் - பூதஞ்சேந்தனுர்; இது சங்க காலத்து நூல்; பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது.

அருஞ்சொற்பொருள்

1. ஏவது - ஏவலை, மாரு - மறுக்காத, இளங்கிளைமை - மக்கள், நவை - குற்றம், வேளாண்மை - உழுதொழில், தேரின் - ஆராயின், கோள்நட்பு - நட்புக் கொள்ளல்.

2. மானம் - பெருமை, தானம் - தான் இருந்து வாழும் இடம், ஊனம் - குறைவு, மானிடவர் - மக்கள்.

3. நட்டார் - நட்புக் கொண்டவர், புறங்கூறுன் - காணுவிடத்து இகழ்ந்து கூறுஞய், நனி -மிக, பட்டாங்கு — உண்மை, பேணி—பாதுகாத்து, பணிந்து - அடங்கி, முட்டு இல் - குறையில்லாத, ஆக்கியக்கால் - ஈட்டிய விடத்து, தக்க உழி - தகுதியான வழியில்.

4. கயவர்-கீழ்மக்கள், கையிகந்து-நீக்கி, உயர்வு உள்ளி-மேன்மேல் உயர்தலே நிணைத்து, எளியர்-வறியவர், ஒளிபட - புகழுண்டாக.

விஞக்கள்

1. உம் பாடப் பகுதியாம் இனியவை நாற்பதில் உள்ள இனியவைகளைக் கூறுக.

2. பெரும் பொருளை என்ன செய்தல் வேண்டும்?

IV. காதை

1. வஞ்சகர் சொல்லை நம்பாதே

பாவிகள் மோனர் போலும்
    பலவிர தியர்கள் போலும்
ஓவறு சகாயர் போலும்
    உறமுறைச் சுற்றம் போலும்
மேவுவர்; அவரைச் சேரின்
    மேன்மைய ரேனும் உய்யார்
பூவையும் முயலும் முன்னோர்
    பூனையைச் சேர்ந்த வாறே. 1

என்னஅக் கதையே தென்றே
    இனப்பற வைகள் வினவ
முன்னமோர் மரத்தின் மேலே
    முயங்கிநான் இருக்கும் போது
தன்னிக ரின்றி வாழுந்
    தனிமுயல் ஒன்று வந்தே
உன்னுமோர் பொந்திற் சேர்ந்தாங்
    குட்புகுந் திருந்த தன்றே. 2

பூவையொன் றங்கு வந்திப்
    பொந்துநான் இருக்கும் வீடு
நீவரு வானேன் என்ன
    நிழலொடு தருக்கள் சாலை
வாவிநற் கூபம் செல்லும்
    வழியினில் தண்ணீர்ப் பந்தல்
சாவடி இவைக ளெல்லாம்
    சகலர்க்கும் பொதுவே என்ன. 3

அங்கவை இரண்டும் சண்டை
ஆகிப்பின் மத்தி யஸ்தர்
தங்களைக் கேட்போம் என்று
தனிமுயல் அழைத்துப் போக
இங்குநாம் வழக்கா வந்தோம்
இருதலை வழக்குந் தீர்க்குந்
துங்கர் ஆர்என்று பூவை
சொல்லவே முயலும் சொல்லும். 4

கருதிய யமுனை யாற்றங்
கரையினில் தவத்தைப் பண்ணும்
பொருவில்கூர்ம் பல்லன் என்னும்
பூனையார் சொல்வார் என்ன;
வெருவியே பூனை பக்கல்
மேவிநாம் செல்வ தெவ்வா
றுரைஎனத் தூர நின்றே
உரைப்பம்என் றழைத்துப் போக. 5

இருவரும் போனுர் அந்த
இருடியார் தவத்தைக் கண்டார்
பெரியவர் இவர்தாம் நம்மைப்
பிடிப்பதும் செய்யார் என்று
கருதினர் பணிந்தெ ழுந்தார்
கைகளும் கட்டி நின்று
பரவினுர் யோகம் நீங்கிப்
பார்த்தனர் பூனை யாரும். 6

ஆரெவர் நீங்கள் நம்மை
அறிந்தனிர் இங்கு வந்த
காரியம் சொல்லும் என்று
கபடனுர் உரைக்கத் தங்கள்
பேரொடு வழக்குஞ் சொல்லப்
பெருகிய மூப்பி ஞலே
நீருரைப் பதுகே ளாது
நெருங்கிவந் துரைக்க என்ன. 7

சற்றிடங் கிட்டி வந்து
சாற்றஇம் மாற்றம் காதில்
உற்றது போலும் பாதி
உருதது போலும் கேட்டோம்
மற்றினிப் பட்ச பாத
வழக்குநாம் உரைப்ப தில்லை
குற்றமிங் கொருவர் மீதிற்
கூறிடிற் கோப மாமே. 8

எண்ணிய விரத மெல்லாம்
இயற்றினம் இவைக்கு மேலாம்
புண்ணிய விரத மென்னும்
பொய்சொலா விரதம் ஒன்றும்
நண்ணிய வுயிரைக் கொல்லா
நலந்தரு விரதம் ஒன்றும்
மண்ணினில் அனுஷ்டிப் போம்நாம்
வழக்கிலோ ரஞ்சொல் லோமே. 9

கிட்டநீர் வந்து சொன்னல்
கேட்கும்நம் காது நம்மை
விட்டுநீர் தூர நின்று
விளம்பினல் கேளா தென்று
துட்டனுர் மாரீ சத்தால்
துலங்குகூர்ம் பல்லன் என்னும்
இட்டமார்ச் சாலன் சொல்ல
இவைதம துளத்தில் எண்ணி. 10

மெய்கள்போற் சொன்ன எல்லாம்
விசுவசித் திரண்டும் செல்லக்
கைகளாற் பிடித்துக் கண்டங்
கடித்திரத் தங்கு டித்த
செய்கப டான பூனை
செருக்கியங் கிருக்கச் சேர்ந்த
மொய்சிறைப் பூவை யோடே
முயலும் அங்கிறந்த தன்றே. 11

குறிப்புரை

1. இது பஞ்ச தந்திரத்தில் உள்ள ஒரு கதை. இதன் ஆசிரியர் வீரமார்த்தாண்ட தேவர். இவரது வரலாறு ஒன்றும் நன்கு அறியப்படவில்லை. நூலின் வரலாற்றைச் 'சுகிர் லாபம்' என்ற உரை நடைப் பாடத்தில் காண்க.

மோனர்-மௌனிகள், ஓவறு-ஓ + அறு - ஒழிதல் இல்லாத, மேவுவர் - சேருவர், பூவை – மைனு என்னும் பறவை, உய்யார் - பிழைக்கமாட்டார்.

2. முயங்கி - உறங்கி, நிகர் - சமானம், உன்னும் - எண்ணும்.

3. தரு - மரம், வாவி - இறங்கும் கிணறு, கூபம் - கிணறு, சாவடி - பொது மன்றம்.

4. இருதலை - இருபக்கமும் உள்ள, துங்கர்-மேலோர்.

5. பொருவு இல் - ஒப்பில்லா, வெருவி - பயந்து, மேவி - விரும்பி, உரைப்பம் - சொல்வோம்.

6. இருடி - முனிவர், பரவினர் - வணங்கினர்கள், யோகம் - தவம்.

7. அறிந்தனிர் - அறிந்து, கபடனர் - வஞ்சகன், மூப்பு - கிழத்தன்மை.

8. மாற்றம் - சொல், சாற்ற - சொல்ல, பட்சபாதம் - ஓர வழக்கு, உற்றது × உருதது.

9. இயற்றினம் - செய்தோம், நண்ணிய - சேர்ந்த, அனுஷ்டிப்போம் - கடைப் பிடிப்போம், ஓரம் சொல்லோம் - பட்ச பாதமாகச் சொல்லோம்.

10. விளம்பினல் - கூறினல், மாரீசம் - வஞ்சனை, துலங்கு - விளங்கும், மார்ச்சாலன் - பூனை.

11. விசுவசித்து - நம்பி, கண்டம்-கழுத்து, செருக்கி-கர்வம்கொண்டு, சேர்ந்த - அங்குச்சென்ற, மொய் - நெருங்கிய.

வினக்கள்

1. முயலும் மைனவும் மோசம் போன கதையை 20 வரிகளில் எழுதுக.

2. யாவருக்கும் பொதுவான இடங்கள் யாவை ?

3. முயலுக்கும் மைனவுக்கும் சண்டை உண்டான தேன் ?

4. அவைகள் வழக்கைத் தீர்க்க எங்குச் சென்றன ?

5. பூனை எப்படி இருந்தது ?

6. பூனை முயலிடமும் மைனவிடமும் கூறியன யாவை ?

7. பூனை கடைப்பிடித்த விரதங்கள் எவையென அது கூறிற்று ?

8. பூனை அவைகளை எங்ஙனம் ஏமாற்றிக் கொன்றது?

9. இக்கதையால் நீ அறிவது யாது?

2. செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு

கண்ணகி கற்பின் ஆற்றல்
கண்டவர் வியக்கும் வண்ணம்
விண்ணக மடைந்த செய்தி
விளம்பினர் வேட மாக்கள்
நண்ணிய நங்கை தன்னை
நல்விழா எடுத்துப் போற்ற
அண்ணல்செங் குட்டு வன்றன்
அகமிக நேர்ந்த தன்றே. (1)

முடியுடை அரசர் கோமான்
முன்னிய கருத்தைச் சூழ்ந்திப்
படியினில் வடபால் மன்னும்
பாங்குடை இமய வெற்பில்
கடிமலர்க் கோதை யாளைக்
கவினுறக் காணும் தெய்வ
வடிவினுக் குரிய கற்கால்
வகுத்திட வேண்டு மென்றே. (2)

மந்திரத் தலைவர் கூற,
மற்றதை ஏற்ற மன்னன்
இந்தநல் லோரை தன்னில்
எழுகநம் படைக ளென்றான்.
அந்தணர் இமயச் சாரல்
அருந்தவம் ஆற்றும் சான்றோர்
வந்தனர் ஆசி கூறி
வாழ்த்தினர் வகுக்க லுற்றார். (3)

முத்தமிழ் அரச ! மேனுள்
மும்மைசால் உலகும் காண
நத்திய நின்முன் வெற்றி
நகைப்பதற் குரிய தென்றே
மெத்தவே இகழ்ந்து பேசி
மேலினிக் காண்ப மென்ருர் ;
அத்தகு மத்தர் தாமும்
ஆரிய வரசர் என்ருர். (4)

கேட்டலும் வெகுளி கூரக்
கிளர்ந்தெழும் உயிர்ப்ப ஞகி
'மேட்டிமை யற்ற வீணர்
மேனியே சிலையைத் தாங்க
நாட்டினில் கொணரே ஞயின்
நானில வரசு வீணே !
பூட்டுக இவுளி தேரிற்
போகநம் படைகள் இன்னே.' (5)

என்றலும் படைகள் ஆர்த்து
எழுந்தன வடபால் மன்னி
நின்றபல் அரசர் வாழ்த்தி
நிதிக்குவை வழங்கி வாழ்ந்தார்
கன்றிய சினத்தன் முன்னே
கனகனும் விசயன் தானும்
ஒன்றிய தானை யோடு
உடற்றினர் உரன ழிந்தார். (6)

செந்தமிழ் பழித்த மன்னர்
சென்னியும் சிதைந்த தீண்டு
வந்தனள் கற்பின் செல்வி
வகுத்ததோர் படிவந் தன்னில்
நந்தமிழ் மன்னர் ஏனை
நாட்டவ ரோடும் ஏத்தி
வந்தனை புரிய வாழ்த்தி
வானகம் புக்காள் மன்னே. (7)

—பாப்பிறையனூர்

இவ்வாசிரியர் சேலம் தூய மேரிப்பள்ளியில் தமிழாசிரியராக இருப்பவர். இப்பகுதி இவர் இயற்றிய "கதைக் கவிதைகள்" என்னும் செய்யுள் நூலிலிருந்து எடுக்கப் பட்டது.

செங்குட்டுவன் சேர மன்னன். இவன் கண்ணகியின் கற்பின் பெருமையை உணர்ந்தான்; அவளை வழிபட எண்ணினான்; கோயில் எடுத்துச் சிலை நாட்ட விரும்பினான்; சிலைக்கான கல்லை இமயமலையிலிருந்து கொண்டுவர வட நாட்டுக்குச் சென்றான்.

1. ஆற்றல் - வல்லமை, விண்ணகம்-மோட்சம், நண்ணிய - சேர நாடு வந்த, நங்கை-கண்ணகி, அகம்- உள்ளம், நேர்ந்தது - விரும்பிற்று.

2. முடியுடை அரசர்-சேரன், சோழன், பாண்டியன், கோமான்-தலைவன், முன்னிய-நினைத்த, சூழ்ந்து-ஆராய்ந்து, படி-பூமி, மன்னும்-நிலைத்து நிற்கும், பாங்குடை-நன்மை பொருந்திய, கடிமலர்க்கோதையாள்-கண்ணகி, கவினுற- அழகு பொருந்த, கால் வகுத்திட-கொண்டுவர.

3. மந்திரத் தலைவர்-அமைச்சர்கள், ஏற்ற - சம்மதித்த, நல்லோரை-(நல்+ஓரை)-நல்ல பொழுது, வகுக்க- கூற.

4. மும்மைசால் உலகம்-விண், மண், பாதாளங்கள், நத்திய-கிடைத்த, மேலினி-இனிமேல், அத்தகு-அந்தத் தகுதியைப் பெற்ற, மத்தர்-உன்மத்தர்.

5. வெகுளி - சினம், கூர - அதிகரிக்க, கிளர்ந் தெழும் - மேன்மேல் உண்டாகும். உயிர்ப்பு - பெருமூச்சு, மேட்டிமை - பெருமை, வீணர் - அற்பர், சிலை - கல், நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். வீணே - பயனற்றது, இவுளி - குதிரை, இன்னே - இப்பொழுதே.

6. ஆர்த்து - ஆரவாரம் செய்து, வடபால் - வடக்குப் பக்கம், நிதிக்குவை - பொருட்குவியல், கன்றிய சினம் - மிக்க சினம். ஒன்றிய - திரண்ட, தானை - சேனை, உடற்றி னர் - போர் செய்தனர், உரன் அழிந்தார் - வலிமை இழந்தனர்.

7. சென்னி - தலை, சிதைந்தது - பாரஞ் சுமந்தமை யால் வருந்தியது, ஈண்டு - இங்கே (சேரநாடு), கற்பின் செல்வி - கண்ணகி, வகுத்த - இயற்றிய, படிவம் - உருவம், ஏத்தி - துதித்து, வானகம் - மோட்சம்.

வினாக்கள்

1. கண்ணகியின் கற்பின் ஆற்றல் யாரால் யாரிடம் சொல்லப்பட்டது ?

2. முடியுடை அரசர் கோமான் யார் ? அவன் எண்ணி யது யாது ?

3. மந்திரிகள் கூறியது யாது ?

4. இமயச்சாரல் முனிவர் கூறியது யாது ?

5. செங்குட்டுவன் செய்த சபதம் யாது ?

6. செங்குட்டுவன் பெற்ற வெற்றியைக் கூறுக.

7. செந்தமிழ் பழித்த மன்னர் சென்னி எங்ஙனம் சிதைந்தது ?

8. கண்ணகி தெய்வம் தோன்றி என்ன செய்தது ?

V. பல்சுவைப் பகுதி

1. வெண்ணிலா

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே—ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே.
பானுவெங் கதிர்குளிக்கும் வெண்ணிலாவே
—நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே.
ஆம்பல்களி கூரவரும் வெண்ணிலாவே—உனக்கு
அம்புயம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே.
இரவையும்நண் பகலாக்கும் வெண்ணிலாவே
—உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ வெண்ணிலாவே.
வளர்ந்து வளர்ந்துவந்த வெண்ணிலாவே
—மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ வெண்ணிலாவே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

2. பத்திரிகை

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.

—பாரதிதாசன்

3. ஊமைத்துரை

ஊமைத் துரைநேர் உருத்துவந்த போதெல்லாம்
சீமைத் துரைகள் சிதறியே—சேமத்தை
நாடியே ஓடினர் நாடும் புலிகாண
ஓடும் எருதுகள்போல் ஒய்ந்து.

—வீரபாண்டியம்

4. நீர்வளப்பம்

விழுந்த அம்சிறை வண்டினம் மிதிப்பமெல் அரும்பு
கிழிந்து வார்தரு தேறலும் கிளர்சினைப் பலவின்
பழுங்க னிந்துவீழ் தேறலும் பழனங்கள் தோறும்
வழிந்து பாய்தலின் வானுற வளர்வன செந்நெல்.

—அதிவீரராம பாண்டியர்

5. முதலியார் வாங்கி வந்த காளை

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த
காளைதினம் இருபோர் தின்னும்
சட்டமுடன் கொள்ளுண்ணும் ; புல்லுண்ணும் ;
அதைப்பண்டி தன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும் ; தொட்டவர்மே
லேசாயும் ; கீழே வீழும் ;
எட்டாள்கள் தூக்கிடினும் தடிகொண்டு
தாக்கிடினும் எழுந்தி ராதே.

—வேதநாயகம் பிள்ளை

6. தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே !
யந்திரங்கள் வகுத்திடு வீரே !
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே !
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே !
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே !

—பாரதியார்

7. சிலேடை

நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையிற்
பாம்பாகும் வாழைப் பழம்.

—காளமேகப் புலவர்

குறிப்புரை

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை : இவர் நாஞ்சில் நாட்டுத் தேரூரில் பிறந்தவர். பெற்றோர்:சிவதாணுப்பிள்ளை–ஆதிலட்சுமி. குலம்: வேளாளர். பிறப்பு : 1876. இறப்பு : 1954. இயற்றிய நூற்கள் : மலரும் மாலையும், ஆசிய சோதி, மருமக்கள்வழி மான்மியம் முதலியன.

அருஞ்சொற்பொருள்

பானு = சூரியன், வெங்கதிர் = வெப்பமான கிரணம், (வெம்மை + கதிர் = வெங்கதிர்). ஆடுதல் = நீராடுதல். ஆம்பல் = அல்லி. களி கூர = மகிழ்ச்சி மிக. அம்புயம் = தாமரை.

2. பாரதிதாசன் : இவர் புதுச்சேரியில் வாழ்பவர். தந்தை : கனகசபை. பிறப்பு : 16—4—1891. இயற் பெயர் : சுப்புரத்தினம். பாரதியாரிடம் கொண்ட அன்பு காரணமாகப் பாரதிதாசன் என்று புனைபெயர் கொண்டவர். இயற்றிய நூற்கள் : பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, தமிழச்சியின் கத்தி முதலியனவாகும். புரட்சி உண்டாக் கும் பாடல்களைப் பாடிவரும் காரணத்தால் இவர் 'புரட்சிக் கவிஞர்' என்று பாராட்டப்பெறுபவர்.

அருஞ்சொற்பொருள்

அகத்தில் = உள்ளத்தில். கதிர் ஒளி = சூரிய ஒளி. பார் = பூமி.

3. செகவீரபாண்டியன் என்பவரால் எழுதப்பட்ட வீரபாண்டியம் என்ற நூலிலிருந்து இப்பாடல் எடுக்கப் பட்டது ஆகும். இந்நூல் வீரச்சுவை நிறைந்த பாக்களைக் கொண்டது.

அருஞ்சொற்பொருள்

நேர் = எதிர். உருத்து = கோபித்து. சேமம் = பாது காவல். நாடும் = தேடும். சீமைத்துரைகள் = ஆங்கிலே யர்கள்.

4. அதிவீரராம பாண்டியர்: இவர் மதுரையை ஆண்ட மன்னர்களில் ஒருவர். இவர் காலம் 15-ஆம் நூற்றுண்டு. இவர் நைடதம் முதலிய நூல்களை இயற்றினர். 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்று இந்நூல் பாராட்டப்பட்டுள்ளது. இவரியற்றிய வேறு நூல்கள்; காசிகாண்டம், இலிங்கபுரா ணம், கூர்மபுராணம்.

அருஞ்சொற்பொருள்

அம்சிறை = அழகிய சிறகு. மிதிப்ப = து வை ப் ப. வார்தரு = சிந்துகின்ற. தேறல் = தேன். கிளர்சினை = விளங்கு கின்ற கிளை. பழனம் = வயல். பலவின் = பலாமரத்தில்.

5. வேதநாயகம் பிள்ளை : காலம்: 1824-89. இவர் மாயவரத்தில் ஜில்லா முன்சீப்பாக இருந்தவர். இவர் கிறித் துவர். இவர் பெண்மதி மாலை, நீதி நூல், சர்வசமய சமரசக் கீர்த்தனை முதலிய செய்யுள் நூல்களையும், பிரதாப

முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் என்னும் உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் சமரச நோக்குடையவர்.

அருஞ்சொற்பொருள்

இட்டம் = விருப்பம். இருபோர் = இரண்டு வைக்கோல் போர். பண்டி = வண்டி. தாக்கிடினும் — அடித்தாலும்.

6. பாரதியார்: இவர் எட்டையபுரத்தில் பிறந்தவர். பெற்றோர்: சின்னசாமி, இலக்குமி. குலம்: வேதியர். பிறப்பு: 1882. இறப்பு: 11—9—1921. எழுதிய நூற்கள்: பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம் முதலியன.

அருஞ்சொற்பொருள்

வகுத்திடுவீர் = செய்திடுவீர். புவிமேல் = பூமி மேல். வேர்வை = வியர்வை நீர். இசைக்கின்றேன் = கூறுகின்றேன்.

7. காளமேகப் புலவர்: இவரது பிள்ளைத் திருநாமம் வரதர் என்பது. இவர் அம்பிகை அருளால் ஆசுகவியானுர். இவரது முழு வரலாற்றை உரைநடையில் உள்ள பாடத்தில் காண்க.

அருஞ்சொற்பொருள்

நஞ்சு = விடம், நைந்து. தேன் + பாயும் = தேம்பாயும். வரை = மலை.

146196

வினுக்கள்

1. வெண்ணிலாவின் அழகை விவரி.
2. பத்திரிகையால் நாம் பெறும் பயன்கள் யாவை ?
3. 'புலிகாண ஓடும் எருது' விளக்கி வரைக.
4. செந்நெல் வளரப் பாய்ந்தது எது? எங்ஙனம் ?
5. வேதநாயகம் பிள்ளை காளையைப் பற்றிக் கூறியவற்றைக் கூறுக.
6. பாரதியார் தொழிலைப் பற்றிக் கூறுவது யாது ?
7. பாம்பும் வாழைப்பழமும் சமம்-எப்படி ?

TB 031(81) N57

RTR
899 C
5/8

Printed on White Printing Paper 24 lbs.

Valluvar Tamil Vachakam

For Standard VII

By

Vidwan: S. NAGARAJAN, M.A., L.T.,
(St. Mary's Training & High School for Women, Salem.)

AND

Vidwan: N. SUNDARARAJAN,
(Senior Tamil Pandit, St. Michael High School, Coimbatore.)

PUBLISHED BY:

SIVALINGAM PUBLISHING HOUSE

EDUCATIONAL PUBLISHERS

ERODE.

Copyright.

Naya Paise 87
(As. 14)